உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] சித்தார்த்தி ௵ மாசி [பகுதி ௪.
Vol. XVIII. February—March 1919-20. No. 4.

## அகராதி நிகண்டு.

தேனருமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக் காதுங்
கானருமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர் வாயு
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக் கையு
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே.(பி-ம்)

சோதிவிநாயகர்பாதமெனமுடி
வோதியநாவிஞர்நீதியுளார்களே. (பி-ம்.)
வெள்ளைவாரணப்பிள்ளையார்பதம்
உள்ளுவார்மனக்கள்ளமாறுமே. (பி-ம்.)
உலகினர்பவமறமலைமகடவஞ்செயும்
தேசுகொள்பட்டீச்சுரன்பதம்பணிந்து
ஒலிபெழுகடல்சூழுலகினிற்றெரிக்கும்
இயற்சொற்றிரிசொற்றிசைச்சொல்வடசொலென்
றுரைதருசொற்களொருநான்கதனிற்
றிரிசொலின்பேதமிருவகையதுதான்
ஒருசொற்றானேபலபொருளாகியும்
பலசொற்றானேயொருபொருணிலவியும்
வருமிதிலொருசொற்பலபொருளதனைத்
தெரிதருபிங்கலந்திவாகரமுதலாப்
பரவியநிகண்டுபலவெடுத்தாராய்ந்
ததிற்சிலதிரட்டியகரமுதலாய்
மதித்தெழுவகாரவர்க்கமீறாய்
மொழிமுதலெழுத்துறாற்றொருநாலடைவே
மொழிதருசூத்திரமுதற்பதந்தோறும்
வருபெயராதிப்பொருளாயெடுத்தே

## செந்தமிழ்.

ஒருபெயர்முதல்னாற்பத்தாறீறாய்
கிளழ்தரவுரைக்குந்தொகைதனக்கிய்பெயர்
அடையினிலங்கஞ்சமர்ந்தனபேரும
இடையிடையடையிலங்கில்லாப்பேரும்
மன்னுருத்திரமூவாயிரத்துடனே
மூன்னூற்றறுபத்தெட்டெனுந்தொகையாய்
யாந்திடுந்தொகுதியீரைந்தெனவகுத்தே
அரியசகாத்தமாயிரத்தைஞ்ஞூற்
றொருபத்தாறெனவுரைத்திடுமாண்டினில்
ஐந்ததிகார*மறுபத்துநாற்கலை
உந்தியவறிவாலொருங்குடனுணர்ந்த
நாற்கவிவாணர்நகைதரயானும்
நூற்பாவதனால்நண்ணியவறிவினில்
ஆதரவாலகராதிநிகண்டென
ஓதினன்யாவருமுணர்ந்திடநினைந்தே.

---

### முதலாவது அகராதிப்பேர்த்தொகுதி

#### அம்முதலொருபெயர்

அரனென்பதுவேசங்கரனாகும். ௧
அம்பிகையென்பதுமையவள்பெயரே. ௨
அயனேவேதனுமெனநுவல்வர் ௩
அம்பணத்தியேதுர்க்கையாகும் ௪
அமுதகதிரோனென்பதுசந்திரன் ௫
அருவலனென்பதுசுக்கிரனாகும் ௬
அசங்கதந்தானேபொய்யின்பெயராம் ௭
அசமேயராவுங்கருவியாகும் ௮
அசட்டமென்பதுவிடிகையினுமம் ௯
அயினிதானேசோறெனலாகும் ௧௦
அம்மியமேகள்ளாமெனமொழிவர் ௧௧
அரவிந்தமென்பதம்போருகமே ௧௨

---

* மறுபத்தென்னவும் (பி-ம்.)

அபின்றளென்பதன்னையின்பேராம் ௧௩
அரிசமென்பதுமிளகெனநுவல்வர் ௧௪
அவையென்பதுவேசபையெனலாகும் ௧௫
அரம்பமென்பதசிலாமுற்றப்பெயரே ௧௬
அகருவேயகிலாமெனமொழிவர் ௧௭
அகலிடந்தானேசெகதலமென்ப ௧௮
அகழியேயகழாமெனவுரைப்பர் ௧௯
அங்குலமென்பதணிவிரலாகும் ௨௦
அங்கையென்பதகங்கையின்பேரே ௨௧
அங்கோலந்தானழிஞ்சிலாகும் ௨௨
அகப்பாவேயரணமெனவுரைப்பர் ௨௩
அசுழமென்பதுநாயெனலாகும் ௨௪
அடங்காரென்பதுபகைவராகும் ௨௫
அடமேபொல்லாங்காமெனமொழிவர் ௨௬
அடக்கமென்பதுவேயொடுக்கத்தின்பெயர் ௨௭
அதங்கதந்தானேயானைத்தீனைய ௨௮
அமையேமூங்கிலாமெனப்புகல்வர் ௨௯
அடிமையென்பதுதொழும்பெனலாகும் ௩௦
அகைப்பேதாழ்த்தலாமெனப்படுமே ௩௧
அசலென்பதுவேயன்னியமாகும் ௩௨
அரித்தைதானேகிலேசமென்றாகும் ௩௩
அலத்தையென்பதுசெம்பஞ்சாகும் ௩௪
அலமரலென்பதுசுழற்சியின்பேரே ௩௫
அமரமேபின்பக்கமாகும் ௩௬
அந்தித்தலென்பதுபொருந்துதலாகும் ௩௭
அம்பகமேவிழியாமெனப்புகல்வர் ௩௮
அம்புராசியேகடலெனப்படுமே ௩௯
அதளென்பதுவேதோலெனலாகும் ௪௦

அம்பணவரென்பதொருசாதிப்பேர் ௪௧
அரந்தையென்பதுகிலேசமாகும் ௪௨
அரிசனந்தானேமஞ்சளின்பேரே ௪௩
அரவரென்பதுவேதியராகும் ௪௪
அவாவேயாசையாமெனத்தகுமே ௪௫
அவையமென்பதுதிரளாயின்பேரே ௪௬
அழுவையேயிபமாமெனவைப்பர் ௪௭
அஞ்சனியென்பதுகாயாவாகும் ௪௮
அழுப்புகந்தானேசுவர்க்கமெனலாம் ௪௯
அழுப்பென்பதுவேசோறெனலாகும் ௫0
அகழுவென்பதுபெருமரமாகும் ௫௧
அறன்கடைதானேபாவமாகும் ௫௨
அறைபோதலென்பதுகீழ்போதலாகும் ௫௩
அற்காமையென்பதுநில்லாமையின்பெயர் ௫௪
அருக்கமேயருக்காமெனமொழிவர் ௫௫
அகுன்றியென்பதுவாச்சியமாகும் ௫௬
அரும்புதானேமுகையெனலாகும் ௫௭
அழலென்பதுவேதழலின்பேரே ௫௮
அழிகைதானேகெடுகையாகும் ௫௯
அளிக்கையென்பதுகொடுத்தலாகும் ௬0
அழைக்கைதானேகூவுகையாகும் ௬௧
அறமேதருமமாமெனப்படுமே ௬௨
அமையமென்பதுபொழுதெனப்புகல்வர் ௬௩
அன்றமையென்பதுகாற்றின்பெயரே ௬௪
அளவரென்பதுவேயுப்பமைப்போரே ௬௫
அழிதல்தானேகனிதலாகும் ௬௬
அளித்தலென்பதுதருப்பண்ணுதலாம் ௬௭
அளாவுதானேகுழைவெனலாகும் ௬௮

அறவோரென்பது துறவோராகும் ௬௯
அறுதொழிலோரேயந்தணராகும் ௭0
அஞ்சமென்பதுவேயன்னமென்புள்ளாம் ௭௧
அனலேயக்கினியாமெனத்தகுமே ௭௨

அம்முதலொருபேர்முற்றும்.

அம்முதலிருபெயர்

அந்தரியேயுமைதுர்க்கையென்றிருபேர் ௭௩
அனந்தைதானோர்சத்தியும்பூமியும் ௭௪
அமரேவிண்ணவரும்பகைவரும் ௭௫
அந்தணர்வேதியரறவோராகும் ௭௬
அகலுளேநாடோரெனவிருபெயர் ௭௭
அகளமென்பதுமிடாவுந்தாழியும் ௭௮
அக்கரமேயொருநோயுமெழுத்தும் ௭௯
அங்காரகமென்பதுநீயோடும்
பூசுவனவுமாமெனுமிருபெயர் ௮0
அசனமேபட்டினிசோறுமிருபெயர் ௮௧
அஞரேதுக்கமறிவிலாரிருபெயர் ௮௨
அடலேதானேயடலையினபெயரும்
வெண்பலியெனவும்விளம்புமிருபெயர் ௮௩
அருளேகிருபையுஞ்சிவசத்தியுமாம் ௮௪
அலமேகலப்பையுமமைவுமாகும் ௮௫
அரந்தையேநீர்நிலையுந்துன்பமும் ௮௬
அரசரேவன்னியருமரசரும் ௮௭
அந்தகனென்பதுகூற்றனுங்குருடனும் ௮௮
அமரேபூசலுமமர்தலுமிருபெயர் ௮௯
அழகேயழகுங்கண்டசற்கரையும் ௯0
அமைதலேசம்மதித்தலும்பொழுதும் ௯௧
அரக்கென்பதுவேசிவப்பரக்கிருபெயர் ௯௨
அகவல்தானோர்பாவுமாடலுமாம் ௯௩

அரங்கமேபோரில்லிடங்கொன்றிருபெயர் கூச
அரசனென்பதுவேந்நிருபனும்யாழும் கூரு
அரம்பைதானேவர்ழையுமரம்பையும் கூசு
அருச்சுனமென்பதுவெண்மையுமருதும் கூஎ
அருத்தியேபகள்ளாசையென்றிருபெயர் கூஅ
அழனமேபிணந்தீயெனவிருபெயர் கூகூ
அற்பமென்பதுசிறிதுநாயிரண்டே க00
அனுக்கமேயுரகஞ்சந்தனமிருபேர் க0க
அரிவையென்பதோர்பருவமாதரும்
மகளிருமென்றேவழங்குமிருபேர் க0உ
அருகமேநிலையாமையுமமணரும் க0௩
அருந்தல்தானேபோசித்தலுமருமையும க0ச
அறிக்கையேபற்றுவித்தலுமறிவும் க0ரு
அறுபதமென்பதுகைபாந்தகரை
வண்டெனவிருபேர்வைக்கவும்படுமே க0சு
அனங்கமேமல்லிகையிருவாட்சி க0எ
அறுவையென்பதுசித்திரைநாளும்
தூசுமெனவேசொல்லுமிருபேர் க0அ
அன்றில்தானேயோர்புள்மூலநாள் க0கூ
அன்னமென்பதுசோறுமோர்புள்ளும் கக0
அன்னியமேகுயிலன்னியமிரண்டாம் ககக
அன்னைதானேதாயுந்தோழியும் ககஉ
அங்காரகனேசெவ்வாயனலாம் கக௩
அற்பசியென்பதைப்பசிமாதமும்
அசுபதிநாளுமாமிருபெயரே ககச
அழுக்கேயானையுமழுக்குமாகும் ககரு
அணவல்தானேயணுகலும்புல்லலும் ககசு
அயனந்தானேயாண்டினிற்பாதியும்
வழியுமென்றேயதிக்குமிருபெயர் ககஎ
அருகல்தானேசுருங்கலுஞ்சார்தலும் ககஅ

அனிலமேபயங்காற்றோடிருபெயர் கக௯

அசனியேயிடிவச்சிரமிருபெயர் க௨0

அரிதமென்பதுதிசையும்பசுமையும் க௨க

அக்கென்பதுவேலிடையின்முரிப்பும்
சங்கின்மணியுஞ்சாற்றாமிருபெயர் க௨௨

அகியேயுரகமுமிரும்புமாகும் க௨௩

அலரேவிரிமலர்பழியெனவிருபெயர் க௨௪

அவிர்தலேயொளிபிறலென்றிருபெயர் க௨௫

அளவையேதினமுமெல்லையுமாகும் க௨௬

அசைதல்தானேதங்கலும்நோதலும் க௨௭

அசமென்பதுமூவாட்டையினெல்லும்
ஆடுமென்றேயறையுமிருபேர் க௨௮

அராகமேபணமுடுகியலிருபேர் க௨௯

அதரேவழியும்புழுதியுமாகும் க௩0

அணையென்பதுவேமெத்தையுங்கரையும் க௩க

அமலையென்பதுமையுஞ்சோறும் க௩௨

அவினயமென்பதுவேநாடகாங்கமும்
பறுவலுமென்றேபகருமிருபெயர் க௩௩

அழுக்காறென்பதுமனக்கோட்டத்துடன்
பொறாமையுமென்றேபுகலுமிருபெயர் க௩௪

அந்தியேயசைசந்தியென்றிருபெயர் க௩௫

அம்முதலிருபேர்முற்றும்

அம்முதல் மூப்பேர்

அத்தனென்பதுவேசிவனும்பிதாவும்
சுவாமியுமென்றேசொல்லுமுப்பேரே க௩௬

அவனியென்பதுபாரகாசோந்தர்
அம்புலியெனுமேயறையுமுப்பேரே க௩௭

அஞ்சலிதானேபேதையுங்காவலும்
கும்பிடலெனவுங்கொள்பேர்மூன்றே க௩௮

அமுதேமழையுந்தேவருணவும்
　　கீரமுமெனவேகிளக்கும்பேரே ௧௩௯

அச்சமென்பதுவேயஞ்சலுமகத்தியும்
　　ஐமையுமெனவேயமைக்கும்பேரே ௧௪0

அடுபவென்பதுவேயச்சமுமடுப்பும்
　　பரணிநாளும்பகர்பேர்மூன்றே ௧௪௧

அளகமென்பதுபெண்ணின்மயிரும்
　　அப்பும்பெண்மயிர்க்குழற்சியும்பேர் ௧௪௨

அடரேஐயமுந்தகடுநெருக்கமும் ௧௪௩

அம்பியேநீர்மேலோடுவனவும்
　　தெப்பமுந்தோணியுஞ்செப்பும்பேரே ௧௪௪

அடியேசெண்டுவெளியுந்தாளும்
　　மண்டபமுமென்றேவழங்கும்பேரே ௧௪௫

அந்தமென்பதுமுடிவுமழகும்
　　கத்தூரியுமெனக்கருதும்பேரே ௧௪௬

அரிட்டமென்பதுகள்ளுங்காக்கையும்
　　வெப்புமெனவேவிதிக்கும்பேரே ௧௪௭

அம்போதியென்பதுகாலுங்கடலும்
　　பாட்டிலக்கணமும்பகரும்பெயரே ௧௪௮

அருணனென்பதிரவியும்புதனும்
　　அருக்கன்றனதுதேர்ப்பாகனுமாமே ௧௪௯

அம்மென்பதுவேயசைச்சொல்லுமழகும்
　　நீருமெனவேநிகழ்பேர்மூன்றே ௧௫0

அம்பரந்தானேகடலும்புடவையும்
　　ஆகாசமுமென்வறையும்பேரே ௧௫௧

அம்பேகணையுநீரும்புயலும் ௧௫௨

அம்புயமென்பதுபுட்டிலும்பொதியும்
　　அம்போருகமுமாகும்பேரே ௧௫௩

அரசேமன்னனுமிராசியுமுடனே
　　ஒருமரமெனவுமுரைக்கும்பெயரே ௧௫௪

அலலென்பதுவே பள்ளமுமவலும்
நீர்நிலையெனவுநிகழ்பேர்மூன்றே ௧௫௫

அநித்தந்தானே நிலையாமையுமொடு
யுத்தியுஞ்சந்தனமுமுப்பேரே ௧௫௬

அண்டரென்பதுவே பகைவருமிடையரும்
அமரரெனவுமமையுமுப்பேரே ௧௫௭

அங்கணமேசலதாரையுஞ்சேறும்
முற்றமுமெனவேமுப்பேராகும் ௧௫௮

அளமேகூர்மையுமுப்பெழுநிலமும்
செறிவுமென்றேதெரித்திடுமுப்பேர் ௧௫௯

அசியென்பதுவேயவமதிச்சிரிப்பும்
வாளோடாயுதம்வழங்குமுப்பேரே ௧௬0

அந்திலென்பதசைச்சொல்லுமிடமும்
ஆங்குமென்றேயமைக்குமுப்பேரே ௧௬௧

அகடென்பதுவேநடுவும்வயிறும்
பொல்லாங்கெனவும்புகலுமுப்பேரே ௧௬௨

அடலேகொலையும்புயவலியுடனும்
பொருதலுமெனவேபுகலுமுப்பேரே ௧௬௩

அலவனென்பதுநண்டும்பூனையும்
நிலவுமென்றேநிகழ்த்துமுப்பேரே ௧௬௪

அடையென்பதுவேயிலையுங்களமும்
இலட்டுகமெனவுமிசைக்குமுப்பேரே ௧௬௫

அர்ச்சமேமுடிவில்லாதனவும்
விண்ணெறிபொன்னும்விதிக்குமுப்பேரே ௧௬௬

அன்னமென்பதுமான்புத்தலையும்
பெருமையுமெனவேபேசுமுப்பேரே ௧௬௭

அமறலென்பதுமிகுதியும்பொலிவும்
பெருமையுமென்றும்பேசிடுமுப்பேர் ௧௬௮

அரணியென்பதுதீக்கடைக்கோலும்
மதிலுங்கவசமும் வைக்குமுப்பேரே ௧௬௯

அயிரேநுண்மையுஞ்சர்க்கரையுந்தனொடு
நுண்மணலெனவு நவிலுமுப்பேரே ௧௭௦

அரங்கந்தானேயாடிடம்போர்க்களம்
ஆற்றிடைக்குறையெனவாகுமுப்பேரே ௧௭௧

அசையேநேரசைநிரைபசையசைச்சொல் ௧௭௨

அள்ளலென்பதுசேறுந்நிரயமும்
அள்ளலுமெனவேயழைத்திடுமுப்பெயர் ௧௭௩

அழுங்கல்தானேயிரங்கலுங்கேடும்
சம்பலேயெனவுங்கருதிடுமுப்பெயர் ௧௭௪

அம்முதன்முப்பேர்முற்றும்.

அம்முதனாற்பெயர்

அனந்தனேசிவன்மாயனருகன்
அனந்தனெனவேயாகுநாற்பேரே ௧௭௫

அகலமென்பதுநிலமுமிடமும்
விரித்துரையுடனேமார்புநாற்பேரே ௧௭௬

அருப்பமென்பதுவேயூருநோயும்
காடுமரணுங்கருதுநாற்பெயரே ௧௭௭

அகைக்கலேவகிர்தலுமொடித்தலும்
அறுத்தலும்பெயர்த்தலுமாகுநாற்பேரே ௧௭௮

அத்தியென்பதுவேயானையுங்கடலும்
எலும்புமோர்மரமுமாம்பேர்நாலாம் ௧௭௯

அயிலேயிரையுமிரும்புங்கூர்மையும்
கைவேலெனவுங்கருதுநாற்பெயரே ௧௮௦

அல்கலென்பதுதங்கலுஞ்சுருங்கலும்
இராத்திரியுடனும்நாளுநாற்பேரே ௧௮௧

அறலென்பதுவேகருநீர்த்திரையும்
சிறுமணலுடனுங்கிளக்குநாற்பேரே ௧௮௨

அல்லேபிரசியுமிராவுமிருளும்
வெயிலுமென்றேவிளம்புநாற்பேரே ௧௮௩

அத்தென்பதுவேபசைச்சொல்லுஞ்சிவப்பும்
இசைப்புமரைக்கூட்டுநாற்பேரே ௧௮௪

அருணமென்பதேனுமிச்சுடனே
மானுஞ்சிவப்பும்வருடையுநாற்பேர் ௧௮௫

அளியேயென்புங்கொடையுமதுவும்
வண்டுமென்றேவருபேர்நான்கே ௧௮௬

அலங்கலென்பதொளிருமசைவும்
இலங்கலுமபூமாலையுமெனநாற்பெயர் ௧௮௭

அந்தரமென்பதுமுடிவும்பேதமும்
இடமுடன்விண்ணுமெனும்பெயர்நாலாம் ௧௮௮

அண்டமேபிரமாண்டமுமுட்டையும்
ஆகாயமும்விண்ணுலகுநாற்பேரே ௧௮௯

அம்மையேவருபிறப்புடனழகும்
அன்னையுமமையுமாகுநாற்பேரே ௧௯௦

அரவமேநூபுரமுமுரகமும்
ஆயிலியத்தோடோசையுநாற்பேர் ௧௯௧

அளையேதயிரும்புற்றும்பாழியும்
முழையுமெனவேமொழியுநாற்பேரே ௧௯௨

அணியென்பதுவேயழகொடுபூணும்
அலங்காரமுமணிவகுப்புநாற்பேரே ௧௯௩

அரலையென்பதுகாழுங்கழலையும்
கனியுங்கடலுங்கருதுநாற்பேரே ௧௯௪

அங்கமேயாக்கமுமெலும்பும்
உறுப்புமுடலுமோதுநாற்பேரே ௧௯௫

அம்முதல்நாற்பேர்முற்றும்.

## அஃமுதலைம்பேர்

அத்தமேயோர்நாளும்வழியும்
பாதியுங்கரமும்பொன்னுமைம்பேரே கசுசு

அத்திரமென்பதுவிடுமாயுதமும்
கணையும்வெற்புங்கழுதையுங்குதிரையும் கசுஎ

அலியேபெண்மகமதுஞ்சேராதும்
நருவலியுடனுநெருப்புமைம்பேரே கசுஅ

அளக்கரேகார்த்திகையுமளமும்
புடவியுங்கடலுஞ்சேறுமைம்பேராம் கசுகூ

அழலமென்பதுநடுக்கமும்பரப்பும்
நாடுமுரசுந்தருக்கமுமைந்தே உ00

அருணமென்பதுமானுடன்சிவப்பும்
ஆனையும்வெள்ளையும்பொன்னுமைம்பேரே உ0க

அரிகம்பானையுஞ்சிங்கமும்பாணியும்
புலியுமோர்புல்லும்பொருந்துமைம்பெயரே உ0உ

அல்லியேவெள்ளாம்பலுந்தாதும்
அகவிதழுடனேகாயாமரமும்
அலியுமெனவேவையம்பேராகும் உ0ங

அங்கதமேதோளணியொடுபொய்யும்
மார்புமுரகமும்வசைச்சொலுமைந்தே உ0ச

அன்னைகாதுஞ்செறிவுங்கூர்மையும்
வலிபற்றிருப்புபவன்மையுமைந்தே உ0ரு

அஃமுதலைம்பேர்முற்றும்.

## அஃமுதலறுபேர்

அம்பணமேதுலாக்கோலும்வாயும்
மரக்கலமுடனேதுப்பும்வாழையும்
ஆமையுமெனவேயறுபேராகும் உ0சு

அத்திரியேயொட்டகமுங்கழுதையும்
வின்னுங்கணையும்வரையும்பரியுமாம் உ0எ

அஞ்சனமேமிக்கயமுங்கருப்பும்
ஓர்கற்பிறப்புங்கண்ணிடுமருந்தும்
இருளுமையுமெனப்பெயராகிற ௨0அ

அறையேகிளவியுமுழைஞ்சார்பொதுநும்
திரையும்பாறையுஞ்சிற்றிலுமறுபெயர் ௨0௯

அம்முதலறுபேர்முற்றும்.
அம்முதலெழுபெயர்.

அலரியேகணவரியுந்நீராவியும்
பூவும்ரவியுமழகுமோர்மரமும்
தேனீயுடனுஞ்செப்புமேழ்பெயரே ௨௧0

அம்பலந்தான் அம்பியும்பிரதமும்
ஓடமும்வெளியும்வெள்ளியுமீயமும்
மரக்காலெனவுமதிக்குமேழ்பேரே ௨௧௧

அரணமேகோத்தளமுங்கவசமும்
மதிலும்வேலுமஞ்சமுங்காடும்
செருப்புமெனவேதெரித்திடுமேழ்பேர் ௨௧௨

அம்முதலேழ்பெயர்முற்றும்.
அம்முதலெண்பெயர்

அரிலென்பதுவேபாயலுஞ்சேகும்
குரலுங்குழலுங்குற்றமுஞ்சந்தியும்
பிணக்குஞ்சிறுதூறுடனுமெண்பெயரே ௨௧௩

ஆரதமேசெயமரததமும்பவளமும்
அரக்குஞ்சிவப்புமரத்தமுங்கடம்பும்
பொன்னுமுற்பவமும்போற்றிடுமெண்பெயர் ௨௧௪

அலகேநுடைப்பமுஞ்சொற்கதிராதியும்
கிழின்பாலுமெண்ணுமாயுதமும்
பலகறையும்புள்வாயுநளாம்மாம் ௨௧௫

அற்றமேயவகாசமுமறைவும்
அற்றமுஞ்சோர்வுமுண்மையுந்துடியும்
சற்றுஞ்சேயுஞ்சாற்றுமெண்பேரே ௨௧௬

அணங்கேபழகும்நோயுங்கொலையும்
அச்சமும்வருத்தமுந்தெய்வமாதரும்
தெய்வப்பெண்ணுந்தெரிக்குமெண்பேரே ௨௧௭

அகமேயுள்ளுமகப்பொருடானும்
இடமும்மனையுமனமும்பாவமும்
ஆன்மாவுடனல்லவுமெண்பெயர் ௨௧௮

அம்முதலெண்பெயர்முற்றும்.

அம்முதலொருபத்தின்பெயர்

அபமேயாடும்நீருஞ்சிலமும்
குளமுங்குதிரையுஞ்சேறும்விழவும்
மகமுமிரும்புஞ்சூதனுடனும்
ஒருபத்துப்பெயரெனவுரைக்கவும்படுமே ௨௧௯

அம்முதலொருபத்தின்பெயர்முற்றும்

அம்முதற்பதினொருபெயர்

அண்டசந்தானையுரகமுந்தவளையும்
முதலையுமீனுமுடும்புமோந்தியும்
அரணையுங்கெவுளியுநண்டும்பறவையும்
ஆமையுமிவைமுதலாப்பதினொருபெயர் ௨௨௦

அம்முதற்பதினொருபேர்முற்றும்.

அம்முதல் நாற்பத்தாறுபெயர்

அரியேயரித்தலுமருக்கனுமுராரியும்
பரியுஞ்சிங்கமும்பகையுந்தேரையும்
பொன்னுங்காற்றும்பொன்னாசக்கிறையும்
செந்நெற்கதிருங்கிள்ளையுங்காந்தியும்
தேருமைம்மையுஞ்சீசரும்வரியும்
கூர்மையுநிறமுங்கூற்றும்வண்டும்
வேயுமன்றியும்விசும்பும்புகையும்
பாயலுஞ்சிலம்பின்பரலுஞ்சோலையும்

கண்ணினில்வரியுங்கடலருமாகமும்
எண்ணியதிகிரியுபீரவாளும்
தகரும்வலியுமரிசியுங்குட்டும்
புகரும்நெருப்புமடரையுஞ்சயனமும்
எறிதருபறையுமெண்படைக்கலமும்
குறிதருபச்சையுங்கூறியமதுவும்
அரிதனுமெனப்பெயர்நாற்பத்தாறே. உஉக

அம்முதற்பலபெயர்ச்சூத்திரமுற்றும்.

ஆமுதலொருபெயர்

ஆலகண்டனென்பதுசிவனும் க
ஆகண்டலனேயிந்திரனாகும் உ
ஆகவமென்பதுபோரெனப்படுமே ௩
ஆகுளிதானேவாச்சியமாகும் ச
ஆசானென்பதுஆசாரியன்பெயர் ரு
ஆசியென்பதுவாழ்த்துதலாகும் சா
ஆசீவகரேயமணராகும் எ
ஆணரென்பதுபாணரெனப்படும் அ
ஆதாரமென்பதுதேகமாகும் கூ
ஆதரவேநல்லாசையாகும் க௦
ஆதபமென்னும்பெயர்வெயிலாகும் கக
ஆதபத்திரமென்பதுகுடையே கஉ
ஆதிரனென்பதுபெரியோனெனப்படும் க௩
ஆதிவருணரேவேதியராகும் கச
ஆதோரணரேயானைப்பாகர் கரு
ஆமரியென்பதுவார்த்தையின்பெயரே கசா
ஆமிரமேமாமரமெனப்படுமே கஎ
ஆயனியென்பதுதூர்க்கையென்றாகும் கஅ

ஆயோதனமேபோர்செய்தலாகும் ௧௯
ஆய்மலரென்பதுதாமரையாகும் ௨௦
ஆரளுரென்பதுறக்கத்தின்பெயர் ௨௧
ஆரென்பதுவோலுக்கமாகும் ௨௨
ஆர்கூடமென்பதுபித்தளையாகும் ௨௩
ஆரவையென்பதுகொத்தளிப்பாமே ௨௪
ஆரிடமென்பதோராகமமாகும் ௨௫
ஆருவமேநீராமெனப்படுமே ௨௬
ஆர்பதமென்பதுவண்டின்பேரே ௨௭
ஆருபதமேபித்தளையாகும் ௨௮
ஆலம்பமென்பதுபற்றெனலாகும் ௨௯
ஆலுதல்தானேயாடுதலாகும் ௩௦
ஆயுகமென்பதுவாணாளாகும் ௩௧
ஆவரிதானேயம்பெனலாகும் ௩௨
ஆரலமென்பதுபகையெனலாகும் ௩௩
ஆனனமேமுகமாமெனப்படுமே ௩௪
ஆவலமென்பதுகூறையாகும் ௩௫
ஆவலாதிதான்றூற்றுதலின்பேர் ௩௬
ஆவித்தலென்பதுகொட்டாவியின்பேர் ௩௭
ஆழல்தானேகறையானெனப்படும் ௩௮
ஆற்றுமையென்பதுபொறுமையாகும் ௩௯
ஆறலகென்பதுதேவருலகே ௪௦
ஆளிதானேசிங்கமாகும் ௪௧
ஆடையென்பதுபுடவையாகும் ௪௨
ஆரணமேமறையாமெனநவில்வர் ௪௩
ஆனலரென்பதிடையராகும் ௪௪
ஆசிதமேமுகமாமெனமொழிவர் ௪௫
ஆயுள்வேதியரேமாமருத்துநூலோர். ௪௬

ஆமுதலொருபெயர் முற்றும்.

# உவமைப்போலிவிளக்கம்.

சென்ற தைமாதச்செந்தமிழ்ப்பகுதியில் சுன்னாகம் வித்துவான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் 'உவமைப்போலி,' 'பக்கப்போலி' என்னும் விடயங்கள் வெளியிடப்பட்டன. ஏதுப்போலி வகையும் இனி யெழுதுவார்கள். அவை அளவைநூல்கற்போர் அறிந்துகொள்ளவேண்டும் பல விடயங்களையுடையன.

இங்ஙனம் பிள்ளையவர்களெழுதிவரும் ஆராய்ச்சிகளெல்லாம் 'செந்தமிழ்'க்கு ஏற்றனவாய்ப் பெரிதும் பயன்படுவன. இத்தகைய ஆராய்ச்சியே சங்கமிருந்து தமிழாராய்தலென நன்கு மதிக்கத்தக்கன.

அவர்கள்காட்டிய 'உவமைப்போலி,' 'பக்கப்போலி'களின்பெயர்களினும், உரைகளினும் உள்ள பிழைகளைத்திருத்தியும், பெயர்களளவிலேவிடப்பட்டவைகளை உதாரணங்காட்டி விளக்கியும், உரைவேறுபாட்டிற்குச் சமாதானங்கூறியும் ஒருரையெழுதி வெளியிடவேண்டுமென்று என்னை அவர்கள் தனியே தூண்டியதற்கிசைந்து யானறிந்த அளவில் ஒருசிறிது உரை வரைகின்றேன்.

இந்த உவமையென்றது காவியவழக்கில் அணிவகையுளொன்றாய உவமையாகாது, அளவைநூலுள்ளே அநுமானவுறுப்பாக வழங்கப்படும் திட்டாந்தமாமென்று கொள்ளத்தக்கது. திட்டாந்தம், உதாரணம், எடுத்துக்காட்டு என்பன ஒருபொருட்சொற்கள்.

'போலி'யென்பது தன்னின்வேறாகிய பிறிதொன்றுபோன்றிருப்பது. இதனால் 'உவமைப்போலி' என்பதற்கு, 'உவமை'யென்னும் திட்டாந்தத்தின்வேறாய்த் திட்டாந்தம்போன்றுதோன்றுவதென்பது பொருளாயிற்று.

இங்குத்திட்டாந்தமென்பது தருக்கநூலுட்கூறியவாறு பரார்த்தாநுமான வாக்கியங்களுள் மூன்றாவதாக எண்ணப்படுங்கூற்று; அது (1) சாதனத்தில் வியாபித்த சாத்தியமுடையதாகத் தெரியப்பட்டதொன்றை யெடுத்துக்காட்டுவதும் (2) சாத்தியாபாவத்தில் வியாபித்த

சாதனாபாவமுடையதாகத் தெளியப்பட்ட தொன்றை யெடுத்துக் காட்டுவதும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னது அந்வய வியாத்தியுடைமையால் 'சாதர்மியமென்றும,' பின்னது வியதிரேக வியாத்தியுடைமையால் 'வைதர்மிய'மென்றும் வழங்கப்படும். அந்வயம்-சாதன, சாத்தியங்களின் உண்மை. வெதிரேகம்-அவற்றின் இன்மை. சாதர்மியம்-சமான (ஒத்த) தர்மமுடையது. வைதர்மியம்-தர்மஹீனமாயிருப்பது. தர்மமெனினும், தன்மமெனினும், தன்மை எனினும் ஒக்கும். இங்கு தர்மமென்று வழங்கப்படுவது சாதன சாத்தியங்களாம். அவை பக்ஷ சபக்ஷங்களுக்கு உடைமையாயிருத்தலால் அவ்வாறு வழங்கப்பட்டன. இதனை, சாத்தியத்தைச் சாத்தியதன்மமெனவும், சாதனத்தைச்சாதனதன்மமெனவும் இருபெயரொட்டாய் மணிமேகலையுளெடுத்தாளுதலானு மறியலாம்.

இவ்விருவகைத்திட்டாந்தத்துள், சாதன்மிய திட்டாந்தமாவது, மலை நெருப்புடைத்து புகையுடைமையால் என்னும் அநுமானத்தில், யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது; பாகசாலைபோல; எனவியாத்தியோடு கூடிய சாதன சாத்தியங்களைத் தன்னகத்துடையதா மொருபொருளைத் திட்டாந்தமாக எடுத்துக் காட்டுவதாம். இது பக்ஷத்தோடொத்த சாதன சாத்தியதர்மங்களையுடைமையாற் சாதன்மியமெனப்பட்டது.

வைதன்மிய திட்டாந்தமாவது:-முற்கூறியசாதன்மியதிட்டாந்த வியாத்திவாசகப் பொருளின் அபாவத்தை (அதாவது ஏது சாத்தியாபாவங்களைத்,) தட்டுமாறி, யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது; ஆற்றுவெள்ளம்போல எனச்சாத்திய சாதனங்களைத்தன்னிடத்தில்லாதவொன்றைத் திட்டாந்தமாக எடுத்துக் காட்டுதலாம். இது பக்ஷத்தோடொவ்வாது வேறுபட்ட சாத்திய சாதனாபாவதர்மங்களையுடைமையால் வைதன்மியமெனப்பட்டது.

இவ்விருவகைத்திட்டாந்தங்களும் இலக்கணம் சிதையில் குற்றமுடையனவாய்த்திட்டாந்தப்போலிகளாம்.

இவ்வாறே இவ்வுறுப்போடொத்த 'பக்கம்,' ஏது என்னும் உறுப்புக்களும் இலக்கணம் சிதையிற் குற்றமுடையனவாய்ப் பல்திறப்பட்ட 'பக்கப் போலி' ஏதுப்போலிகளாம்.

இவையெல்லாம் வடநூல்களில் நியாயாசாரிய வாசகங்களிலும் 'பௌஷ்கராகம முதலியவற்றிலும் தமிழ்நூல்களில் மணிமேகலையிலும், சிவஞான சித்தியாருரை முதலியவற்றிலும் அளவையிலக்கணங்கூறும் பகுதிகளிலறியலாம்.

அச்சிட்ட சிவஞான சித்தியாருரைகளில், இப்பகுதியுள் பல பிழைபாடு காணப்படுகின்றன. அவற்றைச்சுத்தப்பிரதிகொண்டு சோதித்துத்திருத்திக்கொண்டாலன்றிப் பொருளறிதல் அரிதாயிருக்கும். ஒவ்வோருரையும வகுக்குமுறையான் ஒருநெறிப்படாது வேறுபட்டிருக்கிறது.

சிவாக்கிரயோகிகளுரையில், திட்டாந்தப்போலிகளைச் சாதன்மிய வைதன்மியங்களிற் சாத்தியசாதன ஹீநாஹீனவகையால் பொருட்குற்றமுடையன எட்டாகவும், சொல்லும முறை திறம்பலாகிய சொற்குற்றமுடையவை பத்தாகவும் ஆகப்பதினெட்டாக்கிக்காட்டி, அவற்றிற்கு வடமொழிப்பிரமாணங்காட்டியவிடத்து அந்நுவயத்தில் ஐந்துதாரணங்கள்மட்டும் காட்டப்பட்டன. ஐந்தாமுதாரணத்தில் 'ஹ்ருதவத்' எனற்பாலதான 'திட்டாந்தம்வேறாய்ச்சொல்லும்' சொல் எழுதப்படாமையால் ஏனையவும் ஏடெழுதுவோரால் ஓரேடு எழுதாதுவிட்ட தவறுதலால் விடப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. பொருட்குற்றம்-அர்த்த தோஷமெனவும்' சொற்குற்றம்-உக்திதோஷமெனவும்படும்.

மணிமேகலையுள் இப்பொருட்குற்றமுடைய எட்டுடன், அநந்நுவயம், விபரீதாந்நுவயம், அவ்வெதிரேகம், விபரீத வெதிரேகம், என்னும் சொற்குற்றமுடைய நான்குகூட்டித் திட்டாந்தப்போலி பன்னிரண்டுகாட்டப்பட்டன.

அவற்றோடு சந்தித்த வகையால் ஓராறுகூட்டி மறைஞானதேசிகராற் பதினெட்டெனக்காட்டப்பட்டன.

இனிச் சிவஞானமுனிவர் இப்பதினெட்டனுள் அவ்வியாத்திய பிதாநம், வியாத்தியநபிதாநம் என்னும் இரண்டும் 'சொல்லில்வழி வருமுய்த்துணர்'வால் வியாத்தியுணரப்பட்டுப்பிழையிலவாதல்பற்றித் திட்டாந்தப்போலிகளாகாவெனவொழித்து, அவற்றிற்கீடாக ஆசிரய

னம், ஆசிரயவினம் என்றுமிரண்டினும் திட்டாந்தப்பொருள் பர னுக்கு உடம்பாடின்மைபற்றி அவற்றை, சொரூப முன்மைபானுக்கு உடம்பாடாகாதது எனப்பெயர் கொடுத்து இரண்டாகப்பிரித்துச் சாதன்மியத்துள்ளும் வைதன்மியத்துள்ளும் கூட்டி, சாதன்மியத் தும், வைதன்மியத்தும் சொல்லப்பட்ட (சா) விபரீதவியாத்தியபி தானம் '(வை) விபரீதவியாத்தியபிதானம்' ' என்றுமிரண்டையும் சொல்லுமுறை பிறழச்சொல்லும் சொற்குற்ற முடையனவாகக் கொள்ளாது பொருட்குற்ற முடையனவாகக்கொண்டு அவற்றிற்கு முறையே "மேபற்கையாகிய வியாத்தியுடையதெனவும் வெதி ரேக வியாத்திசெயற்கையானுடையதெனவும் பெயர்கொடுத்து அப் பதினெட்டும் பொருட்குற்றமுடையனவாகவைத்தெண்ணி, சந்தித்த வகை ஒராறையும் தனித்தனி அவற்றின் இனத்தோடு கூட்டி முறைப் படுத்தித் தமிழ்ப்பெயரால்வழங்கினர். அவை ஒன்றற்கும் உதா ரணங்காட்டிற்றிலர்.

மறைஞானதேசிகருரையிற் கூறிய முறையில், சாத்தியவிகலம், 'சாதன விகலம்' 'உபயவிகலம்' என முதலெண்ணப்பட்ட மூன் றும் முறையே 'மணிமேகலை (29ல் 350, 341, 360)ல்' சாத்திய தன்மவிகலம், சாதனதன்மவிகலம், உபயதன்மவிகலம் என்ற பெய ருடன் இலக்கணமு முதாரணமுங்காட்டி விளக்கப்பட்டன. இவற் றைச்சிவஞானமுநிவர் முறையே 'சாத்தியமுடைத்தாகாததூஉம்,' 'ஏதுவுடைத்தாகாததூஉம்' இரண்டுமுடைத்தாகாததூஉம் ' எனப் பெயரிட்டு ஒன்று, மூன்று, ஐங்காவதாக வைத்தெண்ணினர். இவை மூன்றும் பொருளானும் இலக்கணத்தானும் மறைஞானதேசிகருரை யோடும் மணிமேகலையோடும் சிறிதும் வேறுபாடில்லனவாய்ச் சென்ற செந்தமிழ்ப்பகுதியிற் செவ்விதினெழுதப்பட்டன.

இனி நான்காவதாகக்காட்டிய 'ஆசிரயகீனம்' என்பது மணி மேகலையுள், (29, 363) உபயதன்மவிகலத்துள் 'அசந்து' எனப் பெயர் கொடுக்கப்பட்டு இலக்கணமும் உதாரணமுமெழுதப்பட்டிருக் கிறது. இங்கு ஆசிரயம் என்றது உபயமென்று அதிகாரப்பட்டுள்ள சாத்திய சாதனங்களுக்கு ஆசிரயமான சிட்டாந்தப்பொருளாமெனக் கொள்ளத்தக்கது. ஆசிரயம்-பற்றுக்கோடு. ஈனம் இல்லாதது. ஆகவே 'ஆசிரயகீனம்' என்றது சாத்திய சாதன தர்மங்களுக்குப பற்றுக்கோடாகியதிட்டாந்தம் இல்பொருளாயிருப்பதென்றவாறும்.

இத்திட்டாந்தப்போலிக்கும் சென்ற செந்தமிழ்ப்பகுதியிற் காட்டியவுதாரணம் பொருந்தும். ஆயினும் இலக்கணம் மேலே கூறியவாறெழுதித்திருத்திக்கொள்ள வேண்டும். விளக்கவுரையில் 'ஆகாயப்பூ என்னும் உவமையில்லை பூவுக்கு ஆகாயம் சார்பிடமாகாமையறிக' என்ற வாக்கியத்தை ஒழித்து அதற்கீடாக "இத்திட்டாந்த வாக்கியத்துள். சாத்திய சாதனங்களுக்கு ஆசிரயமாகக் காட்டிய ஆகாயப்பூவென்னும் திட்டாந்தப்பொருளே இல்லையாதலறிக." என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

இதனை மறைஞானதேசிகருரையில், "மனது அநித்தியம்; மூர்த்தமாகையினாலே," என்கிற மதுவுக்கு ஆகாயப்பூப்போல என்பது திட்டாந்தமாயின் திட்டாந்தமாயிருக்கிற "ஆகாசபுட்ப" மில்லாதபடியினால் (இது திட்டாந்தப்போலியாயிற்று) எனக்கூறியவாற்றானுமறிக. இதனை, சிவாக்கிரயோகிகள் சொரூபாவகல்யமெனக் கூறி விளக்கியவாற்றானுமறிக.

இத்திட்டாந்தப்போலியே சிவஞானமுனிவருரையில் "சொரூபமில்லதாவுடம், சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததூஉம்" என இருவகையாகப்பகுத்து ஏழாவதும், எட்டாவதுமாகவைத்தெண்ணப்பட்டிருக்கிறது. இங்குக்காட்டியவுதாரணம் 'சொரூபமில்லது' என்பதற்குப்பொருந்துவதாம். 'சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாதது' என்பதற்கு உதாரணம்:—காற்று திரவியம்; குணமுடைமையால்; யாதுயாது குணமுடையது அது அது திரவியம் 'ஆகாயம் போல' எனப் புத்தசாருவாகரை நோக்கிக்கூறுதலாம். இங்குதிட்டாந்தமாகக்காட்டப்பட்ட ஆகாயத்தின் சொரூபமே அவருக்கு உடம்பாடில்லாமையாலிது சொரூபமுண்மைபரனுக்கு உடம்பாடாகாதது என்னும் திட்டாந்தப்போலியாதலறிக.

5. 'அவ்வியாத்தியபிதானம்' என்றது வியாத்தியபிதானசூனியமாகச்சொல்லும் திட்டாந்தவுறுப்பென்று பொருள்படும். வியாத்தியபிதானம் என்பது ஈண்டு அந்துவயவியாத்திவாசகமெனக்கொள்ளத்தக்கது. அது, மலை நெருப்புடைத்து, புகையுடைமையால்என்னும் அநுமானத்தில், "யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது" என ஏது சாத்தியங்களுக்குள்ள அந்துவயவியாத்தியைப் புலப்படுத்துக்கூறும் கூற்றாம். இக்கூற்றைக்கூறாது ஒழித்து, 'பாகசாலைபோல' எனத்திட்டாந்தப்பொருளைமட்டுமே கூறின் வியாத்தி தோன்றாமையால் இது திட்டாந்தப்போலியாம் என்பது ஒருசாரார் கருத்து.

இதனை 'அநந்நுவயம்' என மணிமேகலைகூறும். அதுவருமாறு:—

(29, 386) "அநநுவயமாவது சாதநசாத்தியத்

தம்மிற்கூட்டமாத்திரஞ்சொல்லாதே

இரண்டனுடையவுண்மையைக்காட்டுதல்

சத்தம் அநித்தம்; கிருத்தமாதலின்;
யாதொன்று யாதொன்று கிருத்தமது அநித்தமெனும்
அந்நுவயம்சொல்லாது, குடத்தின்கண்ணே
கிருத்தவநித்தங் காணப்பட்ட
என்றால், அந்நுவயந்தெரியாதாகும்."

என்பதனுணர்க. இதனுள், "சாதனசாத்தியங்கள்மிற் கூட்ட மாத்திரஞ்சொல்லாதே இரண்டனுடைய வுண்மையைக்காட்டுதல்" என்றது, "யாதுயாதுசாதனமுடையது அது அது சாத்தியமுடையது" என்னும் பொதுவாய்பாடுபற்றி அவ்வச்சாதந சாத்தியங்களுக்குளதாகிய வியாத்தியைப்புலப்படுத்தும் சிறப்புவாய்பாடாகிய வியாத்திவாசகத்தைமட்டுங் கூறுதொழிந்து, ஏனை அநுமானவுறுப்புக்களையெல்லாங்கூறிச் சாதனசாத்தியமுள்ளதாகத் திட்டாந்தத்தையெடுத்துக்காட்டுதல் என்றவாறு.

சத்தம் இங்குப்பக்ஷம். அநித்தமாதல்சாத்தியம். கிருத்தமாதல் ஏது. (கிருத்தம் ஆக்கப்படுவது.) அந்நுவயம் சொல்லாதென்றது— அந்நுவயவியாத்திவாசகஞ் சொல்லாதொழிந்து. என்றவாறு. குடத்தின்கண்ணே கிருத்தவநித்தங்காணப்பட்ட என்றுமென்றதற்கு, 'குடம் ஆக்கமும் அழிவும் ஒருங்குடையது அதுபோல' எனத் திட்டாந்தவுறுப்புக்கூறினால் எனப் பொருளுரைக்கக்கொள்க. அந்நுவயந்தெரியாதாகும் என்றது - அந்நுவயவியாத்தி புலப்படாதாதலால் இது அநந்நுவயமென்னும் திட்டாந்தப்போலியாமென்றவாறு.

இதனை மறைஞானதேசிகருரையுள்ளும் "இந்தவேதுவுக்குத் தானே (மனது அநித்தியம்; ஏார்த்தமாதலினால் என முன் சொல்லப்பட்ட ஏதுவுக்கே) 'கடம்போல' என்கிறதிட்டாந்தத்திலே யாதொன்றுசார்த்தம் அது அநித்தியம்என்ற(வியாத்திவாசகம்கூறிய) விடத்தல்லது வியாத்திதோன்றுதபடியினால் (இது அவ்வியாத்தியபிதானம்) என்னுஞ்சருக்கான் விளக்கியிருக்குமாறுகாண்க. இது சிவாக்கிரயோகிகளுக்கும் சிவஞானமுனிவர்க்கும் உடம்பாடன்று.

இங்குக்கூறிய வியாத்திவாசகமில்லாவிடினும் வியாத்தி குறிப்பாற்கொள்ளக்கூடுமெனக்கொண்டு, சிவஞானமுனிவரிதனைத் திட்டாந்தப்போலிவகையுட் சேராதொழிந்து, இதற்கீடாக, சொரூபமுள்ளதாயிருப்பதொன்றே பரனுக்கு உடம்பாடில்லதாயிருக்குமாயின் அதுபற்றி அதனை, "சொரூபமுண்மைபரனுக்குடம்பாடில்லாதது" எனப்பெயர்கொடுத்து வேறுபடுத்தி, ஆசிரயசினத்தின்வேறான ஒரு திட்டாந்தப்போலியாக்கினர்.! அதை மறைஞானதேசிகர் ஆசிரயசினத்துள்ளடக்கினர்.

உண்மையாகநோக்குங்கால்,! மறைஞானதேசிகர்கூறிய 'அவ்வியாத்தியபிதானம் என்பதற்கு வியாத்திவாசகங்கூறுதற்குப்பொ

ருக்காததொன்றைத் திட்டாந்தமாகக்கூறுவது என்றாம். இதன் பரியாயமாகவே மணிமேகலையிற்கூறிய 'அந்நுவய' மென்பதற்கு அந்நுவயவியாத்திவாசகங்கூறுதற்குப் பொருந்தாததொன்றைத்திட்டாந்தமாகக்கூறுவது என்னும் பொருள்கொண்டு, குடம் அநித்தியம்; செயற்கையுடைமையால்; படம்போலும். எனவுதாரணங்காட்டுதல் பொருந்தா.

இங்குக்காட்டிய திட்டாந்தமாகியபடம், சாத்தியத்தின் மறுதலையாகிய நித்தியப்பொருளில்விபரீசிக்கிற செயற்கையுடைமையென்னும் ஏதுவையுடையதாயிருத்தலால், "யாதுயாது செயற்கையுடையது அது அது அநித்தியம்" என வியாத்திவாசகங்கூறுதற்குப் பொருந்தாதிருப்பதுகாண்க. சிவஞானமுனிவர்கருத்துக்கும் இஃதிணங்குமென்பதை, விபரீதவியாத்திபாதிகாரத்துக்கு அவரிட்டபெயர்கொண்டு காட்டப்படும் உதாரணத்தானும் விளக்கத்தானும் அறியலாம்.

௬. விபரீதவியாத்தியபிதானமென்பது விபரீதமாகக்கூறும் அந்நுவயவியாத்திவாசகத்தையுடைய திட்டாந்தக்கூற்று என்றவாறு. விபரீதம் - கட்டுமாறல். அது, மலைநெருப்புடைத்து; புகையுடைமையால். என்றவிடத்து, யாதுயாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து; என ஏதுப்பெயர் முன்னும்சாத்தியப்பெயர்பின்னுமாகக்கூறவேண்டிய முறைமைபோகூறாது, யாதுயாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து பாகசாலைபோல எனச்சாத்தியப்பெயர் முன்னும் ஏதுப்பெயர்பின்னுமாகக் கட்டுமாறிக்கூறித் திட்டாந்தங்காட்டுவதாம். இப்படிக்காட்டின் வியாத்தியுணர்வுதோன்றாமையானிதுவும் திட்டாந்தப்போலியாமென்பது கருத்து.

இதனை மணிமேகலையுள், 'விபரீதாந்நுவயம்'என வழங்குப. அது வருமாறு:—

(29, 394) "விபரீதாந்நுவயம்வியாபகத்துடைய
அந்நுவயத்தாலேவியாப்பியம்விதித்தல்
சத்தம் அநித்தங்கிருத்தத்தால்எனின்
யாதொன்றுயாதொன்றுகிருத்தம்அதநித்தமென
வியாப்பியத்தால்வியாபகத்தைக்கருதாது,
யாதொன்றுயாதொன்றுஅநித்தமதுகிருத்தமென
வியாபகத்தால்வியாப்பியத்தைக்கருதல்
அப்படிக்கருதின்,வியாபகம்வியாப்பியத்தை
இன்றியும்நிகழ்தலின்விபரீதம்."

என்பதாம். வியாப்பியம் - ஏகதேசத்திலிருப்பது. (அது இங்கு ஏதுவாம்) வியாபகம் - அதிகதேசத்திலிருப்பது (அது இங்கு சாத்தியமாம்) இங்கு அநித்தமாதல்சாத்தியம். அது கிருத்தமாகிய குட

முதலியவற்றினும் அகிருதகமாகிய மின் முதலியவற்றினு முண்மை யால் அநைகாந்திகப் பிழைபட்டதாயிற்று. இங்கு கிருதகமாதல் ஏது; அது அநித்தமாகிய மின் முதலியவற்றினின்றி குடமுதலியவற்றின் மாத்திரமுண்மையால் ஏகதேசத்து நிகழ்ந்திருப்பதாயிற்று. ஆகவே சாத்திய நிலைக்களத்தின் ஏகதேசத்திருப்பதாகிய ஏதுவான கிருதகமாதலைக்கொண்டு அநித்தமாதலைக்காட்டாது வியாபகமாய் அதிகதேசத்தி லிருப்பதான அநித்தமாதலைக் கொண்டு கிருதகமாதலைக்காட்டின மையால் இது விபரீதம் (மாறுதலுடையது) ஆயிற்றெனக்கொள்க.

இது மறைஞானதேசிகருரையுள் மனது அநித்தியம் மூர்த்தமா தலின் என்னும ஏது சாத்தியங்களுக்கே யாதொன்று மூர்த்தமது அநித்தியம் என்று வியாப்பியமாகிய ஏதுவைப்பிடித்து வியாத்தி சொல்லாமல், இதற்கு விபரீதமாக, யாதொன்று அநித்தியம் அது மூர்த்தம் என்று வியாபகமாகிய சாத்தியத்தைப்பிடித்து வியாத்திசொல்லுகை யினாலிது விபரீதவியாத்தியபிதானமெனவறிக, எனக்குறிக்கப் பட்டது.

இத்திட்டாந்தப்போலியைச் சிவஞானமுனிவர், வியாத்திவா சகத்தை முறைபிறழக்கூறலாகிய சொற்குற்றமுடையதாகக்கொள் ளாது பொருட்குற்றமுடையதாமாறு செயற்கையானாகிய வியாத்தி யுடையதென்றார். அதாவது செயற்கையையுடைய ஏதுவைக் கொண்டு வியாத்திகாட்டும்திட்டாந்தம் என்பதாம். இதற்குதாரணம். மலை புகையுடைத்து; நெருப்புடைமையால. என்னும ஏதுவில் யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து என வியாத்தி வாசகம் கூறுதற்கு(ச்சிவக்கவெந்தவிரும்பின்கண் நெருப்பிருக்கப் புகையின்றி)ப் பொருத்தமில்லாமல் யாது யாது ஈரவிறகுடன் கூடிய நெருப்புடைத்து அது அது புகையுடைத்து என ஈரவிறகின் கூட்ட மாகிய செயற்கையோடுகூடிய வியாத்தியே கூறக்கிடப்பது காண்க.

இவரிதனை வியாப்பிய வியாபகங்களை மாறிக்கூறும் சொற்பிழை யாகக்கொள்ளாது உபாதியுடைய பொருட்பிழையாகக் கொண்டமை யால் இதனோடொக்க அவ்வியாத்தியபிதானமும் கூற்றுற்கூற வேண்டியதான அந்நுவயங்கூறாதுவிட்ட சொற்பிழையெனக்கொள் ளாது அந்நுவய வியாத்திவாசகம் சொல்லுவதற்கியலாத பொருட் பிழையெனக் கொண்டாரென்பது பொருத்தமுடைத்தாகும்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

---

கணபதி துணை.

# சரீரத்தியல்பு.

அமிழ்தினுமினியதமிழறிவுடைய அன்பர்களே, இம்மானுட சரீரத்தினியல்பினைத் தெரிந்தமட்டுங் கூறுகின்றதை விருப்பமுற்றுக் கேட்கவேண்டும்.

“ பூக்குநீராடிய நாண்முதலாகப்பன்னிருநாட்பூவைமார்க்கு
வாய்த்தகரூனுறுங்காலமாதலினலந்நாளுண்மகமேமூலம்
பாத்தசிர்விரததினந்தனக்காகாநாள்பஞ்சபருவமெல்லா
நீத்துநூல்விதித்ததினம்புணரானேற்கருவொன்றுநீக்கினனும் ”

எனத்திருவானைக்காப்புராணத்திற்கூறியவாறு மாதர் இருதுவாகி நீராடியநாண்முதலாகப்பன்னிருநாளுங் கருப்பமுண்டாகு நாளாம், அந்நாட்களிலே சுதினமறிந்து நாயகன் மனைவியைக்கூடவேண்டும். நம்பியகப்பொருளினும இவ்வாறே “ பூத்தகாலே புனைமிழை மனைவியை-நீராடியபின்னீராறுநாளுங்-கருவயிற்றுறூஉங்காலமாதலிற்-பிரியப்பெறுஅன்பரத்தையிற்பிரிவோன் ” எனக்கூறுமாறு காண்க. தனக்காகாநாள்-தான்பிறந்தநாளும், அதற்குப்பத்தாநாளும், அதற்குப்பத்தாநாளுமாம் ; பஞ்சபருவம்-மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, பூரணை, அமாவாசை, அட்டமி என்பனவாம். இப்பன்னிரு நாளினும்,

“ பூவையேயனையார்தம்மிற்பூக்தநாண்முதனானின்
மேவிடார்புணர்ச்சி பின்னைவிரும்புநாள்பன்னிரண்டி
லேவுறுகருப்பமுண்டாமிங்கிதிலிரட்டிநாளான்
பாவினதொற்றைநாளேற்பெண்ணெனப்பகருநீயே ”

என உள்ளமுடையானிற் கூறியவாறு ஒற்றித்தநாளிற் கூடிற் பெண்பிறக்கும், இரட்டித்தநாளிற் கூடில் ஆண்பிறக்குமென்றறிந்து கூடவேண்டும். இருதுவான நாண்முதலாக நான்குதினமும்நாயகியை நாயகன் கூடலாகாது, கூடினல், முதனாள் நாயகனுக்கும், இரண்டாநாள் மனைவிக்கும், மூன்றுநாட்கருப்பத்துக்கும், நான்காநாட்பிறந்த

* இது, இராமநாதபுரஞ்சமஸ்தானத்தைச்சேர்ந்த அபிராமநகரம் வித்யாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கத்தில், நான்காவது ஆண்டு விழாக்கொண்டாட்டத்தில் அக்கிராசனாதிபதியாயிருந்தபோது கூறியபிரசங்கம்.

பிள்ளைக்குங் கேடுண்டாம் என விதானமாலையென்கிற சோதிட நூலிற் கூறியிருப்பதனால், "பூத்தநாண்முதனாலுநாள்கின்மேல்விடார் புணர்ச்சி" என்றார்.

இனி ஆடிமாதத்திலும் நாயகியை நாயகன் கூடலாகாதென்பர். "ஆடிக்காலத்தாகாதாகுங்-கூடற்றென்னன்கொற்றப்புயமே" என்னுமோர் பழஞ்செய்யுள் வெறிவிலக்கற்றுறையில்லைத்தாச் சிலேடையாகக்கூறியவாறு காண்க. கூடினாற் சித்திரைமாசம் பிள்ளைபிறப்பதனாற்பிதாவிற்காகாதென்பர்.

இவ்வாறறிந்து கூடியகாலத்துச்சேர்ந்த சுக்கிலசுரோணிதங்கள் முதன்மாதந்தாமரையினீர்போலிருக்கும். ௨ ஆமாதம் ஒரு கட்டியாம், ௩ ஆமாதம் அங்கங்கள் முளைக்கும், ௪ ஆமாதம் எலும்பு பற்றும், ௫ ஆமாதம் தோல்பற்றும், ௬ ஆமாதம் உரோமமுளைக்கும், ௭ ஆமாதம் ஆசையுடன் அறிவுண்டாகும், ௮ ஆமாதம் பசிதாகமுண்டாம், ௯ ஆமாதம் அசைந்துபெயர்ந்து கிலேசமடையும், ௰ ஆமாதம் பூமியிற் பிறக்கும், இவ்வாறு "செறிவுறுநீராந்திரளுமுளைபொறுமென்புபற்றுங்-குறியுறுதோலாமயிருதிக்குங்கூறுமார்வமுட-னறிவுறுந்தாகமசையுமவனியிடைப்பிறக்கு-நெறியுறுமாதநிரைபறிநல்லநிரைவளையே." என விதானமாலையென்னுஞ் சோதிடநூலிற் கூறியிருத்தல் காண்க.

இவ்வாறு பிறந்த சரீரத்திலே உயிரெவ்வாறு வந்து தங்கியிருக்கின்றதென்றால்? காய்கனியாதியவுணவுகளினிடமாகச்சென்று பிதாவின் வயிற்றினிடமாகவிருந்து பின் புணர்ச்சிக்காலத்திற் சுக்கிலத்தினிடமாகச்சென்று மாதாவின்வயிற்றிற் கருப்பத்திற்சார்ந்து பத்துமாதமிருந்து உண்டாகிய வுடம்பிலே தங்கியிருக்கின்றதென்பர்.

மூதக்கணக்கிற்குப் பத்துமாதமெனக்கூறினும், 'நாட்கணக்கின்படி உ௭௰ நாளே மாதாவயிற்றிலிருந்து பின்பிறக்குமெனச் சோதிடர்கள் கூறுகின்றார்கள். உண்டவுணவின் சாரம் ஒருகூறு மலமாக்கழியும், இருகூறு உடம்பிலே வர்த்திக்குமென ஞானநூலார் கூறுவர்.

இச்சரீரத்தில் ஒன்பதுவாரமெப்போதுந்திறக்கப்பட்டிருப்பினும் உயிர் அத்துவாரங்களின்வழியிலாயினும் போகாமற் சரீரத்திற் கலந்திருக்கின்றது ஓராச்சரியமாம். ஏனெனில்? உயிர் தான்செய்த

வினையையநுபவிக்கவெடுத்தசரீரமாதலால், அவ்வினையை அநுப விக்குமளவுஞ் சரீரத்திலிருந்து பற்று நீங்கவேண்டுதலாமென்க. "வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்றினைப்போதளவுநில்லாதுகண்டாய்" எனப்பட்டினத்தடிகள் கூறியரு ளியவாறு காண்க.

இவ்வுயிரியல்பையும் அவ்வுயிர்வகையையும் இப்போதெடுத்துக் கூறின் மிகவிரிவாகுமாதலா லதனைப்பின்னொருகாலத்திற் பேசுவோமென்க. இனிப் பஞ்சபூதபரிணாமமேயாகிய சரீரமாமாறு அவை வருமாறு, அருவமாகியிருக்கின்றசூக்குமபஞ்சபூதங்கள் தத்தந்தன்மை நீங்கி விகாரப்பட்டு மண், தீ, காற்று, ஆகாயம் எனத் தூல பஞ்சபூதங் களாம். மண் உடம்பாயும் நீர்வாயாயும் (நாவாயும்) தீக்கண்ணா யும், காற்று மூக்காயும், ஆகாயஞ்செவியாயுநின்று பஞ்சப்பொறி களாம் - இப்பொறிகடோறும் விநியோகிக்கப்பட்ட புலன் சுவை முதலைவகைப்படும். அவை மண்ணால் உடம்பு ஊறாயும், (பரிசமா யும்) நீரால் வாய் (நா) சுவையாயும், தீயாற்கண்ணொளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானால் செவி ஓசையாயும் வந்து மருவிநிற்கும். இனி அத்தூல பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றைந்தாய் இருபத்தைந்து வகையாம்-மண்ணின் பகுதி நரம்பு இறைச்சி என்பு மயிர் தோல் என வைந்தாம்; நீரின் பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரம் எனவைந் தாம்; தீயின் பகுதி பசிசோம்புமைதுனம் காட்சி நீர்வேட்கை என வைந்தாம்; காற்றின்பகுதி போதல் வருதல் நோய் கும்பித்தல் பரி சம் எனவைந்தாம்; ஆகாயத்தின் பகுதி வெகுளி மதம் மானம் ஆங் காரம் உலோபம் எனவைந்தாம். இத்தூல பஞ்சபூதங்கள் இருபத் தைந்துவகையாகிச் சரீரமாமெனவறிக. இச்சரீரத்துள்ளே தசவா யுக்களும் தசநாடிகளுமுள்ளன; அவை வருமாறு, பிராணன் அபா னன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவ தத்தன் தனஞ்சயன் என வாயுக்கள் பத்தாம்; இடை பிங்கலை சுழு முனை காந்தாரி அத்தி சிங்குவை சங்கினி பூடர் குகு கன்னி அலம்பு என நாடிகள் பத்தாம்; மூலாதாரத்தெழுபத்தீராயிரநாடிகளும் பிரக் கங்கூட்டின் மூன்று கண்கள் போல இடைபிங்கலை சுழுமுனையென்று மூன்று நாடிகளாமெனவறிக. நாடிகள் எழுபத்தீராயிரத்திலுந் தச நாடிகள் பிரதானமெனவறிக. இந்நாடிகளிற் சில பெயர்களைத் தத்து வக்கட்டளைகளில் வேறுபெயர் கூறுவர். நடுநின்ற சுழுமுனையொழிய

மூக்கினிடமாகவும்வலமாகவு நிற்கும் இடை பிங்கலையென்னுமிரண்டு நாடிகளானும் மூலத்தினிற்கும் பிராணவாயு மேனோக்கியேறி வெளியே புறப்பட்டுப் பன்னிரண்டங்குலியளவு சென்று நாலங்குலிதேய்ந்து உள்ளே எட்டுவிரலடங்குகின்றதெனவறிக. காஞ்சிப்புராணஞ் சனற்குமாரப்படலத்தில், ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசமியங்குகின்றதெனக் கணக்கிட்டிருக்கின்றனர். அபானவாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானவாயு கண்டத்தினிற்கும். வியானவாயு போக்குவரவுசெய்தியங்கப்பண்ணும். சமானவாயு அறுவகைச்சுவையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத்தாதுவின்கண்ணுங்கலப்பிக்கும். எழுவகைத்தாதுக்களாவன, "இரதமுமுதிரமுமென்புந்தோலுந்-தசையுமூளையுஞ்சுக்கிலமுமென்றிவை - யெழுவகைத்தாதுவெனப்பெயர்பெறுமே" எனப் பிங்கல நிகண்டிற் கூறியவாறு காண்க. இரதம்-உமிழ்நீர். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் செய்யும்-கிருகரன் கோபத்தைப்பண்ணுவிக்கும்-தேவதத்தன் உடம்பெரிவைப்பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பைவிடாதே நின்று மூன்று நாள் உச்சந்தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப்போகுமெனவறிக.

இவ்வாறாகிய தூலவுடம்பைக்கொண்டு இருவினையையுந் தன்னகத்தடக்கி அவ்வினையின்பயனையநுபவிக்க வுயிர்பிறக்குமெனவறிக.

இச்சரீரத்தினளவு தன்கையாலே தொண்ணூற்றாறங்குலமாம். மேலே நாற்பத்தேழரை அங்குலமுங் கீழே நாற்பத்தேழரையங்குலமுநீக்கி நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம் என்க. இவ்வாறு சிலப்பதிகாரவுரையிற் கூறியிருக்கின்றார். இந்தமூலாதாரமுதலாறாதாரமும் அன்னமயகோசமுதலைங்கோசமும், ஆமாசயமுதலைந்தாசயமுதலாயினவு மிச்சரீரத்துள்ளனவென ஞானாமிர்தம் அ-ஆவது அகவலிற்கூறுதல் காண்க. இத்தூலசரீரத்தைத் தத்துவக்கட்டளைகளிலே சிறப்பான்மைப்பேதமுறக் கூறியிருக்கின்றார்.

இத்தூலசரீரத்துக்கு முதற்காரணமாயுள்ளது சூக்குமசரீரமாம். "தூலமாமுருவினுக்குச் சூக்குமமுதல்" எனச் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க. அச்சூக்குமசரீரத்துக்கு முதற்காரணம மூலப்பிரகிருதியென்பர்; இவற்றின்வகையெல்லா மீண்டுரைப்பின் விரியுமெனவஞ்சிக்கூறவில்லை. இன்னும் பரசரீரமுமுண்டென்பர்.

இத்தூலசரீரமிறந்தால் உயிர்கள் பின்பென்செய்யுமென்னில்? நன்று கேண்மின் இத்தூலவுடம்பு கழிந்தபின் அதனுடனேதானுங்கழியாமல் நிலைபெற்றிருக்கின்ற சூக்குமவுடம்பினின்று யாதனாசரீரமுண்டாகும், வினைப்பயனையநுபவித்தற்குரிய அந்தயாதனாசரீரமாகிய வெவ்வேறுடம்புகளை உயிர்கள் கடவுளாணைசெலுத்தப்பற்றிக் கொண்டு அச்சரீரத்துடன்சென்று சுவர்க்கநரகங்களிலே இன்ப துன்பங்களையநுபவித்தும், பின்பு வினையின்சேட மநுபவித்தற்காகச் சூக்குமவுடம்போடு நிலத்திற்சென்று கருப்பாசயத்தையடைந்து பிறக்குமெனவறிக. இவ்வாறே சிவஞானசித்தியாரில் "பூதனாசரீரம் போனாற்புரியட்டரூபந்தானே-யாதனாசரீரமாகியின்பதுன்பங்களெல்லா-நாதனாராணையுய்க்கநரகொடுசுவர்க்கந்துய்த்து-நீதியாலணுவாயோனிசேர்ந்திடுஞ்சீவனெல்லாம்" எனக்கூறியவாறு காண்க. புரியட்டரூபம்-சூக்குமவுடம்பு, சூக்குமவுடம்பாவது, சூக்குமபஞ்சபூதமெனப்படுந்தன்மாத்திரைகளைந்தும், மனம் புத்தி யாங்காரமுமாமென்க. இக்கவியில், அணு என்றது நுட்பமாகிய சூக்குமவுடம்பெனக்கொள்க.

இவ்வாறு முன்வினைப்பயனையநுபவிக்கச் சரீரங்களையெடுத்த வுயிர்கள் அநுபவிக்கும்போது பின்னும் வினைகளையீட்டிக்கொள்வதனாலே பின்னுமச்சரீரங்களையெடுத்துக் கறக்குங்கொள்ளிவட்டமுஞ் சுழலுவதுபோலச் சுழலுமெனவறிக. "மாறுயிர்க்குயிர்க்குவேறா ணலிபெண்ணெனும்வழக்கஞ்-சற்றுமில்லை" எனக் காஞ்சிப்புராணத்திற் கூறியவாறே அவ்வுயிர்க்கு ஆணுயிர், பெண்ணுயிர், அலியுயிர் என்னும்பேதமில்லை, இம்மூன்றுபேத முடம்பின்வகைபற்றிச்சொல்லப்படுமெனவறிக.'

ஞானாமிர்தநூலில் ௧௬-ஆவது அகவலில் ஆன்மாவானது, ஆன்மாவினால்வருகிறதுக்கமும், பூதவிகாரப்பொருள்களால்வருகிறதுக்கமும், தெய்வத்தால்வருகிறதுக்கமுமாகிய ஆன்மிகம் பௌதிகம் தைவிகமென மூவகைத்துக்கமுமெய்தியிருக்குமென விரிவாகக்கூறியிருக்கின்றார். அங்ஙனமெய்தியிருப்பதற்கு, இச்சரீரத்தையொரு வீடாக, ௬-ஆவது அகவலில், இரண்டுகாலைநாட்டி, இரண்டுகையை வைத்து, முதுகந்தண்டெலும்புமுகட்டிலேபழுவெலும்பென்னுங் கழியைச் சுவராகநிறைத்து, நரம்பெனுங்கயிற்றினாலேகட்டிக், கழிச்சுவரில் மாங்கிசமென்னு மண்ணைப்பூசி, மயிருடையதோலான்

மேய்ந்து, இந்திரியங்களாகிய ஐந்து சாளரங்களையும்வைத்து, மேலே மணிக்குட்டமாகிய தலையையுங் கூந்தலாகியகொடியையும் பொருத்தி யிருக்கின்றதெனக் கூறினார். இவ்வாறே திருமறைக்காட்டுத் தேவாரத்திலுந் திருநாவுக்கரசுநாயனார் "கால்கொடுத்திருகையேற்றி" என்னுஞ்செய்யுளிற்கூறியிருக்கின்றார். இவ்வாறாகிய சரீரத்தியல்பை யறிந்தவனே ஆன்மாவாகிய தன்னையறிவான், அங்ஙனந்தன்னையறிந்தவனே தன்னுடன் கலந்திருக்கின்ற தலைவனையறிவான் என்றறிக. தன்னையறியான் றலைவனையுமறியான் என்னும் பழமொழியுங்காண்க. திருக்குறளிலும் "சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின் - வகைதெரிவான்கட்டேயுலகு" எனச்சுருக்கிக்கூறியிருத்தல்காண்க.

இவ்வாறு ஆன்மாவிற்கோர் வீடாயிருக்கிற இச்சரீரமே எல்லாச்சரீரங்களினுமேலானதென்றும் மிகவுமரியதென்றுஞ் "சிவஞானசித்தியாரில்", "அண்டசஞ்சுவேதசங்களுற்பிச்சஞ்சராயுசத்தோ - டெண்டருநாலெண்பத்துநான்குநூறாயிரத்தா - லுண்டுபல்யோனியெல்லாமொழிந்துமானுடத்துதித்தல் - கண்டிடிற்கடலைக்கையானீந்தினன்காரியங்காண்" எனக்கூறியிருக்கின்றார். "பரவைவெண்டிரைவடகடற்படுநுகத்துளையுட் - டிரைசெய்தென்கடலிட்டதோர் நோன்கழிசிவணி - யரசவைத்துளையகவயிற்செறிந்ததெனவரிதாற் - பெரியயோனிகள்பிழைத்திவண்மானுடம்பெறலே" எனச்சீவகசிந்தாமணியினுங் கூறியிருக்கின்றார்.

இம்மானுடசரீரமெடுக்குங்கால், வேதவழக்கமுடையநாட்டிலே பிறப்பதுமிக்க புண்ணியத்தாலுண்டாமென்றுங் கீழான சாதியை விட்டுத் தவஞ்செய்தற்குரிய வுத்தமசாதியில்வந்து பிறந்து புறச்சமயங்களிற்செல்லாம லுத்தமசமயத்திற்குரிய நன்மையுண்டாகுதலரிதென்றும் விளங்க "நரர்பயிறேயங்கன்னிலுன்மறைபயிலாநாட்டில் - விரவுதலொழிந்துதோன்றன்மிக்கபுண்ணியத்தாலுங்கீழ்த் தரையினிற்கீழைவிட்டுத்தவஞ்செய்சாதியினில்வந்து - பரசமயங்கட்செல்லாப்பாக்கியம்பண்ணொணாதே" எனச் சிவஞானசித்தியாரிற் கூறியிருக்கின்றார்.

இவ்வாறருமையாகக்கிடைத்த இம்மானுடசரீரத்தாலான்மாக்களரியமுயற்சிசெய்தடையவேண்டுவனவாகிய பயன்கள் அறம்பொருளின்பம்வீடெனநான்காம். இந்நான்கின்வகையெல்லா முறைப்பின்

மிகவிரியுமாதலாற் பின்னொருகாலத்திற் கூறக்கருதியிங்கேயிப்போது கூறவில்லை.

ஆதலால் அன்பர்களே, "உண்டதேயுண்டுமுடுத்ததேயுடுத்து முரைத்ததேயடுத்தடுத்துரைத்தாங் - கண்டதேகண்டுங்கேட்டதே கேட்டுங்கழிந்தனகடவுளுக்கெல்லாம்" எனச்சோணசைலமாலையிற் கூறியவாறு காலத்தைவீணாகக்கழித்துவிடாமல், "விண்ணிடுவில்லும் புனன்மேற்குமிழியுமின்னுமென - மண்ணிடைத்தோன்றியழியுமிக் காயத்தைமாய்விலதென்-றெண்ணிடும்பெண்ணாந்தவிர்த்து" முற்கூறிய நான்கினையும்விரைந்துதேடிப் பெற்றுக்கொள்ளவேண்டும், "கணமதனிற்பிறந்திறுமிக்காயத்தின்அரும்பயனை - புணர்வுடையார்பெறலருணர்வொன்றுமிலார்க்கொன்றுமிலை" எனத் திருவிளையாடற்புராணத்திற் கூறுமாறுணர்க.

இச்சரீரமுதலியவற்றை நிலையாயிருக்குமென்றெண்ணிக் காலங்கழித்தொருபயனுமின்றிப்போயினோர் அனந்தங்கோடியாராகும். "நடலைவாழ்வுகந்தென்செய்தீர்நாணிலீர்- சுடலைசேர்வதுசொற்பிரமாணமே-கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டா-லுடலினார்கிடந்தூர்முனிபண்டமே." எனத்திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்திற்கூறியருளினார்; இதிலே, "சுடலைசேர்வதுசொற்பிரமாணமே" என்பதைச் சுடலைசேர்வது ஆகமப்பிரமாணமன்று காட்சிப்பிரமாணந்தானே யிதற்குச்சந்தேகமில்லையே எனப் பொருள்படக்கூறியிருத்தலால், நிலையில்லா இவ்வுடலை நிலையாகவெண்ணிக்காலங்கழித்து அழிவெய்துவது புல்லறிவாகும்; "ஆக்கையுமாயிரத்தெட்டண்டமுமேநிலையாத்-தாக்கியழிந்தான்சூரன்சோமேசா - நோக்கியிடி-னில்லாதவற்றைநிலையினவென்றுணரும்புல்லறிவாண்மைகடை" எனச்சோமேசர் முதுமொழிவெண்பாவிற்கூறியவாறு காண்க.

இந்தச்சரீரமழிந்தால், இனிவருஞ்சரீரமெதுதானோ, "புல்லாகிப் பூடாய்ப்புழுவாய்மரமாகிப், பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகி" யின்னும்பலவாகிவருஞ்சரீரமோதெரியாது ஆதலால், "ஒன்றேசெய்யவும்வேண்டுமொன்றும் - நன்றேசெய்யவும்வேண்டுநன்றும் - இன்றேசெய்யவும்வேண்டுமின்றும் - இன்னேசெய்யவும்வேண்டும்" "புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி-யின்னினியேசெய்கவறவினை" என்றபடி இச்சரீரமிருக்கும்போதே இதனாலாம்பயன்களை

விரைந்துசெய்யவேண்டும். அநேகர்கள் இச்சரீரத்தையே பொருளாகக்கருதி உடுப்பன பூசுவன அணிவனவாகிய பொருள்களைக் கொண்டு அலங்கரித்து மகிழ்ந்து போதுபோக்குகின்றார்கள்; "தக் கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப் - பொய்க்கோலஞ்செய்யவொழியுமோ" என நாலடியாரினும், நோக்குதனிற்பிணியிருசெவிகளவற்றினுங்குறும்பிநாகர்வாயெச்சின் - தேக்குதனிற்சளிதலையிற்பேன்வேர்வைமலசலங்கண்மூக்குநாற்றம் - போக்கவோர்நாள்கபுவாவிடிலழுக்குமிகத்திரண்டுபுழுத்துநாறு - மாக்கமிலாத்தேகமிதையழகென்னச்செருக்கலறியாமையாமே" என நீதிநூலினுங்கூறியவாறுணராதவரேயாம். அறிவுடையோர் அவ்வலங்கரிப்பெல்லாங்கடவுளுக்கு மவனடியார்களுக்குஞ்செய்துஞ் செய்வித்துங்கண்டு பேரானந்தமுறுவார்கள்.

செவ்வாய்க்கிழமை மங்களவாரமெனப் பெயர்பெற்றிருப்பது போலப் பொய்யாயிருந்து மெய்யெனப் பெயர்பெற்றிருக்கிற இச் சரீரத்தையும் இச்சரீரத்தைநம்பியிருப்போர் சரீரத்தையுங்காப்பதற்கே பலமுயற்சிசெய்து காலமெல்லாங்கழித்துவிடாமல் அம் முயற்சிகளையியற்றும்போதே "கள்ளக்காதலனிடத்தன்புகலந்து வைத்தொழுகு முள்ளக்காரிகைபோல்" இச்சரீரத்தாலாம்பயன்களையுங் கருத்திலமைத்துவைத்துத் தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டியது நல்லறிவுடையோர்கடனாகும்.

"வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்துமாமலரிட்டுத்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே"

"கற்றுக்கொள்வனவாயுளநாவுள
இட்டுக்கொள்வனபூவுளநீருள
கற்றைச்செஞ்சடையானுளனுமுளோ
மெற்றுக்கோநமனான்முனிவுண்பதே"

சுபம்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷை

## பி. ஏ. வகுப்பு

பரீக்ஷகர்—இ. வை. அனந்தராமையர்

### இலக்கியம்.

1920ஞு மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் 10—1.

[அம்சம்—120.]

I. (1) முல்லைப்பாட்டின் தலைவன் இன்னனென்பதையும் அவன் வருதற்கு இன்ன காலத்தைக்குறித்து இன்னதற்குப்பிரிந்தானென்பதையும் ஆதாரத்துடன் எழுதுக.

(2) வருணாச்சிரம ஒழுக்கம் பண்டைக்காலத்தே உண்டென்பது இப்பாட்டின் எப்பகுதியால்தெரிகின்றது?

(3) இப்பாட்டில் முல்லைக்கருப்பொருள்களுள் எவை கூறப்பெறவில்லை?

(4) விரிச்சியோர்த்தலென்றால் என்ன?

II. (1) பண்டைக்காலத்தில் இந்நாட்டில் எவ்வெத்தேவாலயமுண்டென்று சிலப்பதிகாரத்தால் விளங்குகிறது?

(2) (a) கொடுகொட்டி, குடம், மரக்கால், இவ்வாடல்கள் எவ்வெவரால் எந்தெந்தக்காலத்தில் எங்கெங்கே ஆடப்பட்டன?

(b) இப்பெயர்க்காரணங்கள் யாவை?

(3) அடியிலுள்ளவற்றைச்சந்தர்ப்பங்காட்டி விளக்குக,

(1) "யாமொருநாளாகிலும்"

(2) "இலம்பாடுநாணுத்தரும்"

(3) "உய்திக்காலமுரையீரோ"

(4) பாசண்டச்சாத்தன் வரலாறு யாது?

(5) மழையின்மைக்கு அறிகுறியாகச் சிலப்பதிகாரத்திலும் புறநானூற்றிலும் கூறப்பட்டுள்ள ஒன்று எது?

III. (1) (1) அறம்பொருளின்பங்களுள் அறம் சிறந்தது,

(2) ஈவாருங்கொள்வாருமில்லாதவாறும்,

(3) அரசர் புகழின்பொருட்டே வெல்லவிரும்புவர்,

(4) அரசர் நாடிக்கெளியராயிருக்கவேண்டும்:

என்ற கருத்துக்கிசைந்தவற்றுள் எந்த இரண்டினுக்கேனும் ஆதாரமான பகுதிகளைப் புறநானூற்றிலிருந்து எடுத்தெழுதுக.

(2) (1) "வேந்தனொடு...... .......... டலைத்தலையென்பது நாணுத்தகவுடைத்தே" (2) "நோற்றோர்மன்றநின்பகைவர்" (3) வல்லராகுக கெடாததுப்பினின்பகையெதிர்ந்தோரே" தகுதியில்லனபோலத்தோன்றுமிவற்றை முன்னேபின்னே வேண்டிய சொற்களைவருவித்து அவற்றொடு சேர்த்துத்தகுதியுடையன வாக்குக.

(3) இயன்மொழி, துணைவஞ்சி இத்துறைகளின் இலக்கணமென்ன?

(4) "உய்வில்லை செய்ந்நன்றிகொன்றமகற்கு" என்பது புறநானூற்றில் எங்ஙனம் விளக்கப்பட்டிருக்கிறது?

(5) யானை யாமைகளின் எவ்வெவ்வடக்கம் மக்களின் எவ்வெவ் வடக்கத்திற்கு உவமை?

IV. (1) அடியிலுள்ளவற்றிற்குப்பொருளெழுதுக.

(1) அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப் புன்சொலுரைப்பான் பொறை.

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(2) 'இலனென்னு மெவ்வமுரையாமையீதல்' என்பதற்குமூன்று பொருளெழுதுக.

(3) 'குடிபொன்றி', 'மகனெனல் மக்கட்பதடியெனல்', 'ஊருணி நீர்நிறைந்தற்றே': இவற்றில் கோடிடப் பெற்ற பகுதிகளுக்கு இலக்கணக்குறிப்பு எழுதுக.

(4) (1) இன்மையுளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப்பொறை.

(2) தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறு மாறாதே
நாவினாற்சுட்டவடு. இவை என்ன அணிகள்?

(5) (a) "கொடுப்பதழுக்கறுப்பான்சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉமின்றிக்கெடும்" என்பது எந்தக்குறளில் மேற்கோளாகவந்துள்ளது?

(b) இச்சொற்பொருளமைந்த வேறுபாடல் யாது?

V. (1) (a) 'கொள்ளுதறீது கொடுப்பது நன்று', (2) 'அழுக்கா றுடையான்கணாக்கம்போன்றில்லை': இக்கருத்தமைந்த குறள்கள் யாவை?

(b) 'அழுக்காறுடையான்கண்' என்னும் இக்குறள் திருவள்ளுவரில் எதற்கு எடுத்துக்காட்டப் பெற்றிருக்கிறது.

(2) "நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்பது யார் யாருடைய கருத்தைக் காட்டிலும் சிறப்புற்றிருக்கிறது?

(3) திருவள்ளுவருருவம் எங்கேயாரால் பிரதிட்டிப்பிக்கப்பெற்றதென்பர்?

VI. (1) இராமன் கழலணிந்தமை எங்ஙனம் வருணிக்கப் பெற்றிருக்கிறது?

(2) 'கன்னலின்மணவேலைகடிகைதெரிவாரும்'

A தெரிவது எப்படி?

B இது வேறெங்கே கூறப்பட்டுள்ளது?

(3) 'கைவளைதிருத்துபுகடைக்கணினுணர்ந்தாள்' இப்பகுதியால் சீதையின் எவ்வெக் குணங்கள் புலப்படுகின்றன?

(4) (1) பரசுராமன் வில்லின் வரலாறு யாது? (2) அவ்வில்லை வளைத்த இராமன் அவனைநோக்கிக் கூறியவை யாவை?

(5) 'மண்ணிடையாவரிராகவனன்றிமாதவமறத்தோடும் வளர்த்தார்' என்ற கருத்துள்ள பாடற் பகுதியாது?

(6) கம்பர் கூறிய உவமைகளுள் இரண்டை எடுத்துக்காட்டி அவற்றிலுள்ள விசேடங்களையும் குறிக்க.

VII. (1) மூவருலாவுக்குத் தலைவரான சோழர் எவ்வெக்காலத்தவர்?

(2) தஞ்சையும் கங்கைகொண்ட சோழபுரமும் இராஜதானியாயிருந்த காலங்கள் எவை?

(3) கலிங்கத்துப்பரணி திருவிசைப்பா, நன்னூல், பெரியபுராணம் இந்நூற்பெயர்களைக் காலமுறைப்படி எழுதுக.

(4) சிற்றம்பலம் பொன்வேய்ந்தவனும் பேரம்பலம் பொன்வேய்ந்தவனும் யார் யார்?

(5) (1) கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத்தலைவன் யார்?

— (2) இதிலுள்ள நடையும் விடையும் என்ன?

VIII. (1) தோழி எப்போது அறத்தோடு நிற்றற்கு உரியள்?

(2) களவு எத்தனைகாலம் நிகழும்?

(3) அல்லகுறிப்படுதலென்றால் என்னை?

(4) ஊடல் புலவி துனிகளுக்கும் அம்பல் அலர்களுக்குமுள்ள வேறுபாட்டை விளக்குக.

(5) உண்மையான அன்பின் இலக்கணமென்ன?

---

## பி. ஏ. வகுப்பு.

பரீக்ஷகர்—மு. வேங்கிடசாமிநாட்டார்.

### இலக்கணம்.

1920-ஆம் மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

1. (1) நன்னூலில் இப்பொழுதுகாணப்படாதபொருள்யாப்பு அணிகளும் பவணந்தியார் செய்திருக்கவேண்டும் என்பதற்கு ஆதாரம் என்ன?

(2) ந, ன, ர, ற, இவ்வெழுத்துக்கள் எவ்வெம்முயற்சியால் பிறக்கின்றன?

(3) செப்பு, ஒன்பது; இவை பழைய காலத்தில் எங்ஙனம் எழுதப்பட்டனவாகும்?

II. (1) லகர ளகர மெய்களின் பின்வந்து மயங்கற்குரிய மெய்கள் யாவை?

(2) எவ்வெவ்வெழுத்துக்கள் எவ்வெச்சாரியை பெற்று வரும்?

(3) ஓரெழுத்துப்பதங்களில் பன்னிரண்டு எழுதிப் பொருள் கூறுக.

III. (1) பகுபதவுறுப்புள் சந்தியென்பது யாது? விகாரம் என்பது யாது?

(2) பெரியீர், நினைந்தக்கால், வருதும்: இச்சொற்களின் உறுப்புக்களைப்பிரித்து முடித்துக்காட்டுக.

(3) அங்கை, நாடுரி, மக்கட்குணம், வான்சிறப்பு, ஆதிபகவன், வண்டின்கால்: புணர்ச்சிகட்கு விதி கூறுக.

IV. (1) இருதிணைப்பொதுப்பெயர்கள் யாவை? இருதிணைப் பொது வினைகள் யாவை?

(2) ஆகுபெயர் அன்மொழித்தொகைகளின் இலக்கணமும் அவற்றின் வேறுபாடும் எழுதுக.

(3) சொல்லெச்சம், இசையெச்சம்: ஏவல், வியங்கோள்: இவற்றின் பேதத்தினை விளக்க.

V. (1) முற்றெச்சம், எச்சத்திரிபு, இடைப்பிறவரல், இரட்டைக்கிளவி, கருமகருத்தா, பூட்டுவிற்பொருள்கோள்: இவற்றை விளக்கி உதாரணங்கொடுக்க.

(2) 'செய்யும்' என்னும் முற்று எத்திணைபால் இடங்கட்கு உரியதாகும்? மலையாள மொழியில் இதற்கு இவ்வரம்பு உளதோ?

(3) திணை, பால், கால வழுவமைதிகளுக்கு ஒவ்வோருதாரணந்தந்து, அமைதிக்குக் காரணங்காட்டுக.

VI. (1) அகத்திய முனிவன், குலோத்துங்கச்சோழன், இவை எங்ஙனம் வருதல் சிறப்பு?

(2) தில், மன், என்னும் இடைச்சொற்கள் எவ்வெப்பொருள் குறிக்கும்?

(3) நன்னூலிற் கூறிய விதிகளில் 'பழையன கழிதல்' என்று விடற்பாலன இருப்பிற் காட்டுக.

---

# பி. ஏ. வகுப்பு.

பரீக்ஷகர்—K. G. சேஷையர் B. A., B. L. M. R. A. S.

---

## வியாசம்.

---

1920௵ மார்ச்சுமீ 6௳ சனிக்கிழமைபகல் மணி 4½—5½வரை.

[அம்சம்—30]

பின் குறித்த யாதேனுமோர் விஷயத்தைப்பற்றி ஒரு வியாசமெழுதுக:—

(1) இன்னாசெய்தாரையொறுத்தலவர்நாண நன்னயஞ்செய்து விடல்.

(2) நட்பின் சிறப்பு.

(3) தமிழ்நாட்டுப்பண்டைக்காலத்துச் சரித்திர வாராய்ச்சிக்கு முதற்றுணைக்கருவி தொன்னூற்பயிற்சி.

(4) தமிழ் வர்த்தமானபத்திரிகைகள் விளைவிக்கும் பயன்.

---

## இண்டர்மீடியேட் வகுப்பு.

பரீக்ஷகர்—அ. கந்தசாமிப் பிள்ளை.

## இலக்கியம்.

1920௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமை பகல் மணி 10—1 வரை.

[அம்சம்—120.]

1. (a) ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அறநெறிச்சாரம், பாரதம், திருவிளையாடற்புராணம்:—இவை ஒவ்வொன்றும் எவ்வித நூல்வரிசையிற்சேரும்?

(b) i. சிறுபஞ்சமூலம், ஏலாதி எனப்பெயர்வந்த தெதனால்?

ii. இவைபோன்ற வேறுநூல் ஒன்று கூறுக.

iii. ஏலாதியில் ஒவ்வொரு செய்யுளும் ஆறு பொருளே கூறுகிறதா? உதாரணத்தால் விளக்குக.

2. (a) i. வில்லிபுத்தூரர்க்கு முன்னும் பின்னும் தமிழிற்பாரதம் பாடினவர் யாவர்?

ii. இவர் நடையின் அழகு, வடமொழித்தொடரையமைத்தல் இவ்விரண்டுதாரணத்தால் விளக்குக.

(b) புன்கண்மாலை, பலபாதகரைப்பயந்தாள், வண்டிமிர்சண்பகம் இந்த அடைமொழிகளைப்பற்றி நீங்கள் எழுதவிருக்கும் குறிப்பை எழுதுக.

(c) i. ஒத்தினாலென்னகுறை? ii. கைக்கொண்டாற் குழல்பற்றி iii. சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கி, iv. பொய்ச்சுற்றத்தாரும் பொருளோ கீற்றிட்ட மொழிகள் இங்கு எப்பொருளில் வந்தன?

3. (a) காக்கைக்குக்காப்படுத்தசோறு, தோற்பாவைக் கூத்திருட்போர் இவ்வுவமைகளின் பொதுத்தன்மை யாது? உவமேயம் யாது?

(b) i. இரப்பாரில் வள்ளல்களும் இல்லை எப்படி

ii. தானே தனக்குக்கரி— எப்படி?

iii. பிறரோடு பேசுங்கால் கருதவேண்டும் விதிகள் யாவை?

(c) ஐவகை வேள்வி, நால்வகை சீலம், உருவம் நான்கும் அருவம் நான்கும் அகன்றேன் ஏதேனும் இரண்டிற்கு வகை எழுதுக.

4. (a) திருதராட்டிரனை "நீதியமைதருதந்தை" எனக்கூறிப்பின் "விரகினுக்கோர் வீடுபோல்வான்" எனக்கூறலது தகுமா? காரணம் கூறுக.

(b) அவன், வீரிளின் றுவந்த தருமனுக்குக்கூறிய முகமனுரைகளிற்சில கூறி அவற்றைப்பற்றி யுங்கள் அபிப்பிராயத்தையும் கூறுக.

5. (a) பின் வருவனவற்றில் இரண்டிற்கு விடைதருக.

i. கதையோடு சம்பந்தப்படுத்தி வில்லிபுத்தூரார்கூறும் சூரிய சந்திரோதய வருணனைச்செய்யுட்களில் ஒன்று.

ii. திருக்குறளையடக்கி.. பாரதச்செய்யுட்களில் ஒன்று.

iii. "கொங்குதேர்வாழ்க்கை" என்னும் செய்யுள்.

iv. நெஞ்சினைப்பற்றி அறநெறிச்சாரம் கூறும் செய்யுட்களில் ஒன்று.

(b) பரஞ்சோதியார் கூறும், சோலைவருணனை வேனிற்கால வியல்பு, களியர் இயல்பு ஏதேனும் ஒன்றை வசனமாக எழுதிக்காட்டுக?

(c) விடங்கன், ஆலவாய், காளத்தி, ஆரிடம், இவை காரணப் பெயராவதைக்காட்டுக.

6. (a) தேம்போதனைத்தும் தலைசாயும் சிலபோதலரும் சிலபோது
வேம்போதங்குவாழ்வவெல்லாம் வெங்கானுடனேவேவாவோ
ஆம்போதாகும் அதுவின்றி ஆயபொருள்களம்முறையே
போம்போதனைத்தும்போம்முன்னம் பொறுத்தீரினும் பொறுமென்றான்.

i. முதலிரண்டடிகளில் ஒவ்வொன்றும் எவ்வெப்பொருள் தரும்?

ii. முன்னம் பொறுத்தீர் — இரண்டு சந்தர்ப்பங்கூறுக.

iii. இதின் ஒவ்வொரு வாக்கியமும் ஒன்றோடொன்று சம்பந்தமுடையதாகக் கருத்தைத்தெளிவுற எழுதுக.

(b) மொட்டினபருமணி முடிகொடேர்ப்பரி
வெட்டின பரிகளும் வெம்மையாறின
மட்டினபரிமள மரங்கள்யாவையும்
கட்டின கழைபொருகவளயானையே—

i. இதற்குப்பதவுரை எழுதுக.

ii. 'இதில் எத்தனை வாக்கியங்கள் உள்ளன? அவை எவை?

iii. முற்றெச்சம், முற்றும்மை, பால்பகாவஃறிணைப்பெயர் இப்பாட்டில் காட்டுக.

iv. தேர்ப்பரி, தேர்பரி, வித்தியாசம் யாது?

(c) தருமியென்றுளான் — ஒருவனுன்முகத்தொருவன்மார்புறை
திருவனுடருந்தேவனுனுரு வருவகாலகன்றுனைத் தன்கலி
வெருவகாடிமுன்வீழ்ந்து வேண்டுவான்.
பொழிப்புரை எழுதுக.

7. (a) தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, ஒட்டு இவ்வணிகளுக்கு ஒவ்வொரு உதாரணம் உங்கள் பாட புத்தகத்திலிருந்து காட்டி விளக்குக.

(b) தேசிங்கு சரித்திரத்தில் சுவை குறைய எழுதினபாகம் எது?

---

## இண்டர்மீடியேட்

### பரீக்ஷகர்—ஆ. கார்மேகக்கோனர்.

---

### இலக்கணம்.

---

1920௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமைபகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

I. (1) நன்னூலை இயற்றுமாறு வேண்டிக்கொண்ட அரசன் யார்? அவனது காலம் நகர் முதலியவற்றைக்குறிக்க.

(2) 'நன்னூல்' என்பதின் பெயர்க்காரணத்தையும் நுலை இந்நூலின் வழிநூலென்பதையும் வரைக.

(3) நன்னூலார் காலத்துக்கு முன்னரேவடசொற்கள் தமிழில் மிகுதியாகப்பயிலத்தொடங்கிவிட்டன: இதனை இந்நூலின் அகச்சான்றுகொண்டு புலப்படுத்த.

(4) 'இடுகுறிகாரணப்பெயர்' என்ற பெயரிலக்கணச்சூத்திரத்தைப்பெயரியலில் வைக்காது எழுத்தியலில் வைத்ததேன்?

II. (1) பல்—|—தலை நாழி—|—உரி முள்—|—தாள் எண்—|—பெரிது பாண்—|—தொழில் இப்பதங்களை இலக்கண அமைதியாய்ப்புணர்த்திக்காட்டி விதியுங் கூறுக.

(2) செய்யுளிகல் அளபெடுப்பது எதற்காக? நீவிர்கொடுக்கும் விடைக்கு இரண்டுதாரணமுந்தருக.

(3) சார்பெழுத்துக்கள் இத்தனையாமென்பதையும் அதன் விரி இத்தனையாமென்பதையும் விவரிக்க.

(4) தொழிற்பெயர், பண்புப்பெயர் பெயரெச்சம் இவற்றின் விகுதிகள் யாவை?

III. (1) இடைநிலைகளையன்றி வேறுகாலங்காட்டுவனயாவை? உதாரணமுந்தருக.

(2) தமிழிலுள்ள திணை பால் வகுப்புக்களை விவரிக்க.

(3) இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி, இலக்கணப்போலி:—இவற்றிற்குக்குறிப்பெழுதி ஒவ்வோருதாரணங்கொடுக்க.

(4) ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளையும் அவ்வுருபுகள் தரும் பொருளினையும் எழுதுக.

IV. (1) ஏவலுக்கும் வியங்கோளுக்கும், அடுக்குத்தொடர்க்கும் இரட்டைக்கிளவிக்கும், ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் உள்ள வேறுபாட்டினைக்குறிக்க.

(2) 'கடி' என்னும் உரிச்சொல் எவ்வெப்பொருளை உணர்த்தும்?

(3) கொல், மன், மற்று, ஏ, ஓடு இவ்விடைச்சொற்கள் என்னென்ன பொருளில் வரும்.

(4) யசு—இறும்பூது—தாலு—எழு—கதவு இவற்றுள், குற்றுகரங்களையும் முற்றுகரங்களையும் எடுத்துக்காட்டுக.

---

## இன்டர்மீடியேட் வகுப்பு.

பரீக்ஷகர்—V. T. ஸ்ரீநிவாஸையங்கார்

### வியாசம்.

1920-௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமை பகல் மணி $4\frac{1}{2}$—$5\frac{1}{2}$ வரை
[அம்சம்—30.]

அடியிற்கண்டவற்றுள் எவையேனும் இரண்டைப்பற்றி வியாசம் எழுதுக.

1. விஜயத்தின் ஜயம் அல்லது சைதன்யரின் மதக்கொள்கைகளும் உபதேசங்களும்.
2. கம்பர் சோழனது கர்வத்தை அடக்கியது அல்லது திருவாய்மொழி சங்கமேறியது.
3. மூன்று சங்கங்களின் வரலாறு அல்லது தமிழ் அபிவிருத்திக்கு வேண்டிய சீர்திருத்தங்கள்.

---

## ஸ்கூல்பைனல் வகுப்பு.

பரீக்ஷகர்—ரெ. அப்புவையங்கார்.

### இலக்கியம்.

1920௵ மார்ச்சு௴ 6௳ சனிக்கிழமை பகல் 10—1.
[அம்சம்—20]

I. 1. நற்றிணையென்றால் என்ன? இந்நூல் எத்தனை பாடல்களுள்ளன? இதிற்கூறப்பட்ட விஷயம் என்ன? இந்நூல் எதைச் சேர்ந்தது?

2. வேதமுதல்வன் யார்? அவனுக்கு எதெது சேவடிமுதலியவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது?

3. குகனது தன்மை கூறக்கேட்டுக் கௌசலை பரதன் முதலியோரை நோக்கிக்கூறியதென்ன?

4. பின்வரும் பாட்டிற்குப் பதவுரை எழுதுக.—

வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவன் அடி வீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினன் நகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

5. கீழே குறித்தவற்றின் பொருளை நன்கு விளக்குக.—

a. மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல் என்முனனே.

b. மூன்றுலகு மீன்றாளை முன்னீன்றாளைப் பெற்றத் தாற்பெருஞ்செல்வம் யான்பிறத்தலா லிழந்தபெரியாள்.

c. முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின் றும் வழுவினன்.

II. 1. நால்வகைச்செய்கை, நால்வகைப்பயன் இவற்றின் இலக்கணமென்ன?

2. பன்னு நான்கினும் பணியணி பரமர் பொற்கோயில்
முன்னியே வலம் வருவது சரியை பன்முறையின்
மன்னுமோர் வகையன்னது விரிக்கிலேழ் வகையாம்

இதற்குப் பொழிப்புரை யெழுதுக.—

3. வலன் என்னென்ன தன்மையில் நாய், நரி, புலி இவைகளுக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறான்.

4. பின்வரும் பதங்களுக்கு அர்த்தமெழுதுக.—

அடலை, நடலை, முண்டம் முளைத்தோரை, ஐவனம், பதக்கை, கூரல், ஒடி, உழுவை, சூகரம், சுரவிதாங்கி, தொயதோல்.

5. மறைமுடிமேற் பழுத்த பழமென்ற தெதனை? அதனை எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்?

III. 1. பிள்ளைத்தமிழிற் குறிக்கும் பருவம் பத்துள் ஏதாவது மூன்றினிலக்கணமு மவற்றின் காலமும் இன்னின்னதென விளக்குக.

2. விநாயகர் விசுவரூபங்கொண்டபொழுது அவரது உருவம ஆகாயத்தை ஊடுருவிச்சொல்வதை எப்படி வர்ணிக்கிறார்?

3. "நாமேவுஅம்முதலொடொன்றவினையுருபுதொகநான்கனடியாதிசெய்து-நாற்சீரினு னெறிவிளக்கி" இதனைத் தெளிவாய் விளக்கி யெழுதுக.

4. வாரானைப்பருவத்துக்குக் கூறியபாட்டிற் குறித்தகதையைப் பத்து வரிக்குளெழுதுக.

5. நோய்ப்பிறவி போக்குவார்க்கு-நோற்றவர் புராணமிலாதமை வராதாம் என்பதற்குக் காட்டிய திருட்டாந்தங்களெவை?

IV. 1. சீகாளத்தியென்று பெயரெய்தியதற்குக் காரணமென்ன? இதற்கு வேறு சிறப்புப்பெயரென்ன?

2. பாண்டி நாட்டிற்கே உரிய சிறந்த பொருள்களெவை?

3. சிவபெருமான், முருகக்கடவுள், பாண்டியன், இவன்மனைவி, இவர்களைக்குறிக்கும் மும்மூன்று சொற்றொடரெழுதுக?

4. சிவபெருமான் கொங்குதேர் வாழ்க்கையென்னும் பாட்டைத் தருமிக்கு எழுதிக்கொடுத்ததற்கு என்னென்ன காரணங் கூறுகின்றனர்.

5. வெள்ளைத்தாமரைச் செல்வியென்ற பாட்டை வசனக்கிரமப்படுத்தி எழுதுக.

V. 1. "உத்தியோகபருவமென்றுலென்ன?

2. புயங்ககேது விரோசனன் சுதனைக்கங்காசுதனேடும் வெகுளி மாற்றி" இதன் சந்தர்ப்ப மென்ன?

3. துவாரகை' அதின் மதில், அகழி'கொடி இவைகளின் வர்ணனையைக்கூறும் பாடல்களிலேதாவதொன்றின் கருத்தைச்சுருக்கமாக விளக்குக.

4. புயங்கம், பன்னகம், துரோணன், துரியோதனன், யுதிட்டிரன், விரோணனன், புரோகிதன் இப்பெயர்க்காரங்கூறுக.

5. கண்ணன் துரியோதனனை நோக்கி உனக்குப்படைத்துணையாகமாட்டேனென்பதற்கு என்னென்ன காரணங்கள் கூறினர்? அதற்குத் துரியோதனன் கண்ணனைக்கேட்டுக்கொண்டதென்ன?

VI. 1. கடலைத் தெப்பத்தினுலன்றிக் கையினுலே கடக்கக்கருதுதல் போலுமென்ற தெதனை?

2. மார்ச்சார நியாயம், பார்வை மிருகம், நான்காவது சத்திரிபாதம் என்றுலென்ன?

3. வானுதி ஐந்து, மனமாதி நான்கு எவை?

4. சிவப்பருமானை வில்லாலடித்தவன். கல்லாலெறிந்தவன், பிரம்பாலடித்தவன் யார் யார்? எந்தெந்த சந்தர்ப்பத்தில்.

VII. 1. பச்சையப்பமுதலியார் 1774 மார்ச்சுமீ 27வ 1791ஹு ஜூன்மீ 28வ 1794ஹு மார்ச்சுமீ 22வ இவைகளிலென்னென்ன காரியஞ்செய்தனர்?

2. சிவஞானமுனிவர் செய்த திராவிட மகாபாஷ்யத்துக்கு அங்கங்களெவை? இவரது மாணுக்கருட் சிறந்தவர்கள் யார்?

3. கண்ணகிக்குக் கோவில் கட்டுவித்துத் திருவிழா முதலிய சிறப்புச் செய்தவர்கள் யார் யார்?

4. நாயக்கர் வமிசத்தினர் எத்தனை வருஷகாலம் அரசாட்சி புரிந்தனர்? யார்முதல் யார்வரை?

5. மங்கம்மாள் யார்? இவர் அரசாட்சி செய்வதற்குக் காரணமென்ன? நாயக்கர் வமிசத்தினர் தற்காலத்திலெங்கெங்கே யுள்ளார்கள்?

VIII. 1. சாக்ரடீஸ் வாக்கியங்களை அடிப்படையாகவைத்து யார் யார் என்னென்ன மதங்களை யேற்படுத்தினர்?

2. சப்தமுனிவரென்றது யாரை? அவர்கள் கூறிய அமுதவாக்கியங்களெவை?

IX. 1. மோகனாங்கியின் இருப்பிடம், பூந்தோட்டம் அவள் முத்து வியாபாரியிடத்திற்கு முத்துமாலை வாங்கத் தோட்டத்துக்குவந்தபொழுது செய்துகொண்ட அலங்காரம் இவற்றுள் ஏதாவதொன்றைச் சிறப்பித்துப்பத்து வரிக்குளெழுதுக.

2. இலக்குமிக்கும், விமலைக்கும் நடந்த சம்பாஷணையை அல்லது விஜயராகவ நாயக்கருக்குங் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு நடந்த சம்பாஷணையை விடாமலெழுதுக.

---

## ஸ்கூல்பைனல் வகுப்பு.

### பரீக்ஷகர்—சர்க்கரை இராமசாமிப்புலவர்.

### இலக்கணம்.

1920-ஆ மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி 2—4 வரை.

[அம்சம்—90.]

I. 1. தமிழிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவற்றுள் நன்னூலிலமைந்தவை என்னென்ன? அந்நூலின் அதிகார வியல்களை முறையே கூறுக.

2. எழுத்தியலிற் கூறிய பெயரின் பொது விலக்கணத்துக்கும் பெயரியலிற் கூறிய பெயர்ச்சொல்லின் பொது விலக்கணத்துக்குமுள்ள வேற்றுமையென்ன? பெயரிலக்கணத்தை யெழுத்தியலிற் கூறியது ஏன்?

3. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யொவ்வொன்றுக்குமுள்ள பேதமென்ன? ஒற்றளபெடை நாற்பத்திரண்டாவது எப்படி? அவற்றிற் கொவ்வோருதாரணந்தருக.

4. யகரம்வரத் திரியாத குற்றுகரம் எது? அது அங்ஙனம் திரியாததற்கு விதியாது?

5. மகரக்குறுக்க மூன்றுவது எப்படி? பன்னிரண்டுயிருடன் மொழிமுதலாகு மெய்கள் எவை? இறுதிப்போலியை, முற்கூறியதனாற் போந்த பயன் யாது?

II. 1. பண்புப்பகுதிகள், விகாரப்பட்டுப் புணரும் பதப்புணர்ச்சிகள் ஒவ்வொன்றுக்குந் தனித்தனி யுதாரணந் தருக.

2. குறிப்புவினையெச்சவிகுதி, பண்புப்பெயர் விகுதி, கருவிப் பொருள்விகுதி, பகுதிப் பொருள்விகுதி, தொழிற் பெயர் விகுதி, இவை எவை? ஒவ்வொன்றுக்குந் தனித் தனி யிரண்டுதாரணங்கூறுக.

3. தன்வினையைப் பிறவினையாக்குமா றெங்ஙனம்? காலங் காட்டும் விகுதிச் சூத்திரத்தில்ஙங்கேயென்ற மிகையாற் பெறும் விதிகளெவை?

4. தழுவுதொடர், தழாத்தொடர், இவற்றின் வேறுபா டென்ன? அவையிருவழியினும் வருமாறெங்ஙனம்?

5. புணர்ச்சிவிகாரத்துக்குஞ் செய்யுள்விகாரத்துக்கும், முன்னிலை வினைக்கும் ஏவல் வினைக்குமுள்ள பேத மென்ன?

III. 1. பல்வகைப் பெயரெச்சம், என்றாலென்ன? அவ்வழியில் இ ஐ முன் வலிவரினியல்பு மிகுதி விகற்பம் எவ்வெவ்விடத்துக் கொள்ளப்பெறும்?

2. டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே, என்றதனாற் கொள்ளும் பொருள் என்னென்ன?

3. உயிரீறொத்தல் என்பது என்ன? இயல்புயிரீறு விதியுயிரீறுகட் குதாரம் வேண்டும்.

4. அங்குக்கண்டான், இருப்புலக்கை, தோன்றல்செவி, தாய்கை, நாய்க்கால், வாட்படை, மான்குளம்பு, ஆதி பகவன் இவைகட்குப் புணர்ச்சிவிதி கூறுக.

5. முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவுக்குமுள்ள பேதமென்ன?

IV. 1. முதற்குறிப்பு, பலபொருள் குறித்தவொருவினைத்திரிசொல், 'காரியவாகுபெயர், வேற்றுமையுருபேற்காத பெயர், விளியேற்காத பெயர் இவை எவை'?

2. வினையையும், அதனொடு பொருந்தும் பெயரையுங் கொண்டு முடியும் வேற்றுமைகள் எவை? உருபு மயக்கமாவது யாது? இரண்டு உதாரணங் கூறுக.

3. புகையிலைப்பொடி., மணியொளி, கம்புகொண்டு தாக்கினன், கற்பிற் சிறந்தவளருந்ததி, முருகன்றந்தை இவை எந்தெந்த வேற்றுமைக்கு எவ்வெப்பொருட்குதாரணமாகும்?

4. வினையெச்சங் கொண்டுமுடியுஞ்சொற்கள் எவை? பெயரெச்சத்தில் எஞ்சிநிற்கும் பெயர்கள் எவை?

5. செய என்னெச்ச முக்காலத்திலும் வருவது எப்படி?

V. 1. எச்சத்திரிபு, முற்றெச்சம், இருதிணை முக்கூற்றொருமை, இருதிணைப்பொதுவினை, இவை எவை? இவைகட்கொவ்வோருதாரணம் வேண்டும்.

2. வியங்கோள், ஏவல், இவைகட்குள்ள பேதமென்ன?

3. உவமை, உம்மை, பண்பு, இவை எவ்வெவைபற்றி வரும்?

4. வழுவென்றாலென்ன? திணை, பால், மரபு, வழுவமைதிகட்கு ஒவ்வோருதாரணந்தருக.

5. எ. ஒ. உம், இவை எவ்வெப் பொருள்தரும்? அறுவகை வினா எண்வகை விடை இவை எவை?

---

## ஸ்கூல் பைனல் வகுப்பு.

பரீக்ஷகர்—ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியா.

### வியாசம்.

1920-ஆம் மார்ச்சுமீ 6உ சனிக்கிழமை பகல் மணி 4½—5½ வரை.

[அம்சம்—30.]

பின் வருவனவற்றுள் ஏதேனு மிரண்டு விஷயங்களைப் பற்றி மாத்திரம், ஒவ்வொன்றும் மும்மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல், இரண்டு வியாஸங்களெழுதுக:

I. மங்கம்மாள் அல்லது திருமலை நாயகரின் ஆட்சிச்சிறப்பு.

II. 'சொக்கநாத நாயகரும் இலக்குமியும்' அல்லது சொக்கநாத நாயகரின் தஞ்சைப் படையெடுப்பு.

III. ஸாக்ரட்டீஸின் கொள்கைகள் அல்லது அவர் சிறையிலிருக்கும்போது நடந்த செய்திகள்.

IV. ஆங்கில கலாசாலைகளில் தமிழ்ச் சங்கங்களேற்படுத்தி விருத்தி செய்யும் மார்க்கங்கள்.

---